
ஆன்ம உணர்வு
(ஸ்வய ஞானானுபவம்)
இதழ் 1
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# ஆன்ம உணர்வு

## (ஸ்வயஞானானுபவம்)

## இதழ் 1

**வெளியீடு :**

அன்பின் குடில்,

253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,

கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,

பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,

தமிழ்நாடு - 638 311

போன் : (04256) 229655

முதற்பதிப்பு : குரு பூர்ணிமா ஜூலை 2010
இதழ் 1
350 பிரதிகள்

அச்சிட்டோர்:

ஆரித்ரா பிரிண்டர்ஸ்,

பெங்களூர் - 560 003.

தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முகவுரை | ௨ |
| ௨. | ஆன்ம உணர்வு (ஸ்வய ஞானானுபவம்) பாடல்களும் கருத்துரையும் | ௨௩ |


எல்லாம் நீ!



ஸத்திய வாக்கு 1

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"! "நம்பினோர் கெடுவதில்லை"!
"தெய்வம் மனுஷ்யாணாம்"! "யத் பாவம் தத் பவதி"!
"ஸ்ரீ ராம், ஜெய ராம், ஜெய ஜெய ராம்", ஓம்!

# "அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம்,
# அகமே எல்லாம்"!
# "ஜகம், பரமம், ஜீவர்களும்,
# சிறிதும் இல்லை"!
# நீ அடங்கினால் உலகம்
# உன்னுள் அடங்கும்!
# நீ அடக்கினால் உலகம்
# உன்னை அடக்கி அழிக்கும்!

அடங்கு! அடங்கு! அடக்காதே! அடக்காதே!



# "சிரகஸ்யம்"!

## "முகவுரை"!

ஓம் ஆத்மானந்த குழந்தைகளே!

(எதையும், எவரையும்)
அடக்காமையிலும்!
(நான்)
நான் அடங்குதலிலும்!!
(நாவு)

மனநிறைவும்! ஆத்ம சுகமும்! பெற்று, ஏற்று வந்த, பிராரப்தத்தை! ஆனந்தமாக முடித்து, இனி பிறவா நிலையாகிய, ஜீவன் முக்தியையும்! பெறுவீர்கள்

பெற்று விட்டீர்கள் என ஆசி கூறி, வாழ்த்துகிறோம். இதன் நம்பிக்கையே! உங்கள் நண்பன்! இரண்டுபட்ட, சந்தேகமே! உங்கள் விரோதி ஆகும்.

# முகவுரை




இந்த சிவரகசியம் என்ற அரிய பெரிய, நூலானது, ஆதிசிவம் என்ற, ஸ்ரீ ந சுழிமு ஓர்ந்து! வாயிலாக, ஸ்ரீமத் ரிபு மகாத்மா கேட்க, அவர்தம் மாணவனாகிய, நிதாகன்! மூலமாக வெளிவரும்போது, நிமித்தம்

ஆதி ஸ்ரீமஹான் களின்! அனுபவ வாக்கு, எப்படி இருக்கிறது என்றால்?

(A) வேதாந்தம்! (B) வேதம்! (C) சாஸ்திரம்! என மூன்றாக சொல்வர்.

(A) வேதாந்தம்:- இது பர ஒலி! ஆகும். இது சுத்த அத்வைதம் ஆகும். இது பர அம்சமாகவே, தோன்றிய ஆதி ஸ்ரீமஹான் களின், சத்திய வாக்காகும். இது ஆதிசிவம் என்ற, ஆதிசிவம்! பரதகுணியின் நிலையில், இருந்து கொண்டு, ஆதி ஸ்ரீமஹான் களாகிய, தம் அம்சஸ்வரூபர்களுக்கு! பர ஒலியாக, உணர்த்தியதாகும். இதில் கர்மாவோ! பக்தியோ! ஞானமோ! நிலைகளோ! யோகம்! மந்திரம்! மற்றும்,





சிவரகஸ்யமே (ௐ)
சிவகீதை என,
நாமம் பெற்றது.
அந்த ஸ்ரீமத் சிவ
கீதையானது, இக்
கலியுகமாந்தருக்கு
கடைத்தேறும் நிமித்தம்
ரத்தினச் சுருக்கமாக, பொறுக்கி எடுக்கப்பட்டு

ஸத்தியம் என்றால் உண்மை உண்மையாகவே இருக்கிறது என பொருள்படும்.

எவைகளையும் போதியாமல், தம் இருப்பு
நிலையை மட்டும்; உணர்த்திக் கொண்டு,

**ஜகத்** இல்லாத தன்மையாலும்; அதுவே
**மரைத்** ஆகவே இருந்த தன்மையாலும்;
**பிரம்மஸத்தியம்!** என்றும்
பரஒலியாகவே, ஒலித்துக் கொண்டிருந்தது.
இவ்வொலியின், ரகஸ்யம் என்னவென்றால்?

**சிவோஹம்** (சிவமேநாம்) சிவம் + அஹம் சிவோஹம்

என்பதாகும் என, ஆதி ஸ்ரீமந்நாரணன்கள்!
வாயிலாக அறிகிறோம்.
குறிப்பு:- சர்வ சகலவும், சிவசொரூபமாகவே,
பிரம்மமயமாகவே இருக்கும் நிலையாகும்.



இ 140 பாடல்களைக் கொண்ட ஸ்வய ஞான நுபவ நூல்!

எனு நாமம் தாங்கி வெளி வந்ததாகும் எவ்வுடைமையும். இது எப்படி வெளிவந்தது? இதன் ஆசிரியர் யார்?

இப்படி மறைத்தாகவே, இருக்கும் நிலையை, சிவரகஸ்யம் (பிரம்ம ரகஸ்யம்.) என்று, ஆதி ஸ்ரீ மஹான்கள் கூறுவர். வாக்கிய விளக்கமாக, இதை சொல்லும் போது, இதை முன் கூறிய, சதாசிவத்தின் (ஆதிகுரு) தக்ஷிணா மூர்த்தியின் வாக்கு என்றும் சொல்லுவர்.


இதன்பின், இதையே அடிப்படையாகக் கொண்டு, ஸ்ரீ வஸிஷ்ட பிரான்! முதல் கொண்டு, கலியுக ஸ்ரீ அகஸ்தியபிரான்! வரை, தோன்றிய, அனைத்து ஸ்ரீ மஹாத்மாக்களின்!



என கேள்வி எழும் போது? 6
ரத்தின சுருக்கமாக
நூற்றிநாற்பது
பாடல்களாக்கியது,
ஸத்குரு!
ஸ்ரீமந் வேத வியாச பகவானும்
நாரதாதி கண்ணனும் ஆகும்.

திருவாக்காக வந்ததே வேதாந்தம் ஆகும்.

ஆதிசிவமாகிய, ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியின்!
நேரடி திருவாக்கால் சிவரகஸ்யம்!
கேட்டவர்களில், சனகாதி யோகிகளும்!
ஸ்ரீ ரிபு மஹாத்மாவும் ஆகும். அதன்பின்னரே,
உபநிஷத்! என்ற வேதாந்த
பாடங்களில் வரும், அநேக ஸ்ரீ மஹாத்மாக்
களும், ஆவர். இக்கலியுகத்தில் தோன்றிய
ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாளும்! ஸ்ரீ தக்ஷிணா
மூர்த்தியின்! அம்சமாக கூறிறவும். இக்கலியுக
சாதனைக்கு, ஏற்றவாறு, சற்று எளிமையாய்
விளக்கப்படுத்தி, கூறி இருக்கிறார். இவர் கருத்து
வேறுபடவில்லை. சற்று மாறுபட்டிருக்கிறது.



இதற்கு சிவய ஞானநுபவ நூலின் நாமகரணம் செய்த பெருமை, (7) ஸ்ரீமத்பாபு மஹாத்மாவுக்கே பொருந்தும் என வேதிய பிரமாணமாக சொல்லுவோம்.

(B) வேதம்:- இது இறை ஒலி ஆகும். இது ஸ்ரீபகவானின், மூச்சுக் காற்று என்றும், ஸ்ரீமஹான்களால் கூறப்படுகிறது. இது தேவ தெய்வங்களுக்கு மட்டும் உரியதாகும். பரசொரூபமே, இயக்க நிமித்தமாக, தேவதெய்வமாக வருவதால், அவை இருப்பு நிலையிலும், தம் இயக்க நிலையிலும், தம்மை தாமே, விளங்கப்பண்ணும் நிலையில்:- வேதமந்திர கோசமாக, வெளிப்படுத்திக் கொள்கிறது. ஆதவே, வேதமே தேவதெய்வங்களின் பிராமணமாகும். இவ் வேத ஒலி ஒன்றாகவே இருந்தன.



சாஸ்திரம்:- ஒழுக்கம்
சரித்திரம்:- அதன் கதைகள்.

இதில் கூறிய, ஸ்வய ஞானுபவ (8) நூலின் 140 பாடல்களின் ஆழ்ந்த கருத்துக்களும் அதனால் கிடைத்தேறிய அவைகளின் பெருமையும் இதில் கூறியவர்களாகிய ஸ்ரீமஹாத்மாக்கள்

கலி யுகத்தில், மக்களின் நலன் கருதி, அவ் வேதத்தை, நான்காக பிரித்த பெருமை, வேத மஹான் ஸ்ரீவியாஸ பகவானுக்கே பொருந்தும்.

உ சாஸ்திரம்:- இது கலியுக ஜீவர்களை, நல்வழிப் படுத்தி நடத்திச் செல்லும் நியதியில், ஸ்ரீமஹான்களால் கூறும். சட்ட திட்ட, ஒழுங்கு முறை கட்டுப்பாடு ஆகும்.

கலிதோஷத்தால் சாஸ்திரம்! சரித்திரமாக! மாறிவிட்டது என்றே சொல்லலாம்.

சாஸ்திர ஒழுக்க கட்டுப்பாட்டின்படி நடந்தால், வேதம் ஸ்வய அனுபவமாகும். வேதம் ஸ்வய அனுபவமானால், வேதாந்தம் உன்றே இயல்பாக ஏற்றுக் கொண்டு, ஜீவன் முக்தி சாத்தியமாகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.



ஓம் ஸ்ரீமத் ஸ்ரீ மஹாத்மா!
வேதவியாச பிரான் அவர்கள்!
எழுதியன் திருவுளதிய,
ஆதியே வேறையுமே சாரும்
ஞானானன்! வேறெவரையும் சாராது.

பரா! நிலைக்கு வேதாந்தம்! என்றும்;
இறை! " வேதம்! " ;
ஜீவ! " சாஸ்திரம்! " ;
ஸ்ரீ மஹான்கள்! அனுபவ நிலையில் கூறுவர்.
ஆதி ஸ்ரீ மஹான்களின்! வாக்கு எப்படி
வருகிறது என்றால் :- மூவினை! மும்மலம்! மூவாசை!
முக்குணம்! என 12 ஆக பிரித்தார்கள்.
இப்பன்னிரண்டும்! ஒழிந்து நாசமாகவேண்டும்
என்றும். அப்படி ஒழிந்தால் தான், ஞானம்!
சாத்தியமாகும் என்றும்; இதன் அடிப்படையில்
12 ஆண்டுகள்! குருகுலவாசமும்! அதாவது
ஸத்குரு சேவையின்! காலம் என்றும்;
பின்னர் ஸத்பாவ சேவை! என்று




நியாயம்! 10
ஓர் பதினைந்து
அல்லது பத்து நிமி
ஷங்கள்! முன் கூறிய
பிரார்த்தனையின்படி!
விட்டு! மனம் உருகி,
அழுதால்?

கண்ணா!

நிலையில், 6 ஆண்டுகளும், பயிற்சி பெற
வேண்டும் என்றும்; ஆக மொத்தம் 18
ஆண்டுகள்! ஆத்ம ஞான சாதனை! என்றும்,
கூறுவர்! ஸ்ரீ ஞானிகள்.
அப்படியானால், கிட்டத்தட்ட இருபது!
ஆண்டுகள்! ஆத்ம ஞான பயிற்சி! பெற வேண்டும்
என்பது தெளிவாகிறது.
மற்றும் பதினைந்து வித்தைகளிலும் நாம
ரூபம்! கெட்டு அழிய வேண்டும்! என்று
கூறவில்லை. அதன் காரணம்:- நாமரூப ஜனனம்
இல்லாத, ஜீவன் முக்தியை! குறிப்பிடவில்லை.
மற்றும் அனைத்தும், நாமரூப சம்பந்தம் கொண்ட
சக்திகளும்! மகிமைகளும்! அபார ஆற்றலும்!
அஷ்ட சித்திகளும்! சம்பந்தம் கொண்டதாகும்.
இந்த ஆத்மஞானத்தின்! முக்கியம் என்னவென்றால்

# முகவுரை



அவஸ்யம் உங்கள் சாதனையின் (1) பலன், முழுமையாக பெறலாம். உங்கள் கண்ணீரின் மதிப்பை புரிந்த பலரும் இல்லை. பயனும் இல்லை. இத்தகைய உங்கள் கண்ணீரே முகவுரை இடம் பெறுகிறது

(A) முதலில், நாமரூபம்! அனைத்தும் கெட்டு அழிந்து, நாசமாக வேண்டும்.

(B) அதனால் தான், வாஸனை (குணம்) கெடும்.

(C) குணம் கெட்டால், குண சம்பந்த மனம்! கெடும்.

(D) மனம் கெடும் போது, இயக்கம் அனைத்தும் நாசமாகும்.

(E) இயக்கம் நாசமானால், புண்ணிய பாப வினை! நாசமாகும்.

(F) புண்ணிய பாப வினை நாசமாகும் போது, அதன் பின்னே விட்ட, ஜனனமரணம்! இல்லாது ஒழியும்.

(G) ஜனனமரணம் இல்லையென்றாகும் போது, அதை நிர்ணயம் செய்யும், காலம் என்ற விதி! நாசமாகும்.



ஆகையால்தான் அதுதால் (12)

இறைவன் உள்ள/

பெறுவாம் என்றும்,

அவனை பெற்ற நிலையில்

அதுவும் நீயும் ஒன்றாகி

அது நாம்/ என ஆகவாம் இவ்வாக்கியம் ஸத்தியம்! ஸத்தியம்!

(H) மனம்/ வினை/ விதி! முறையாக
ஒவ்வொன்றாக நாசமாகி, முழு நிலை
பெறும் போது, நாமரூபம், இல்லாத்தன்மை
யினால் மண்/ பதுமைகளின் ஆட்டமாட்டம்
இருக்காது. இருக்க இயலாது.

(I) அங்கு எல்லாம் மண்/(பர) மயமே ஆகும்.

அங்கு அது நாமாய்! நாமே அதுவாய்!

பரப்பிரம்மானந்த/ மயமாகவே,

சும்மாவே! சுகமாகவே/ இருப்போம். அங்கு
நம்மை விளக்க யாரும் இல்லை. நம்மை நாம்
விளக்க வேண்டுமென்றால், நமக்கு அயலாக,
யாரும்! எதுவும்! இல்லையென்பதே ஸத்தியம்.

# முகவுரை



சாஸ்திரம்! (13)

என்பது, கருவி கரணங்களின் **ஒழுக்க** கட்டுப்பாடே சாஸ்திரம்.

அது சமஸ்கிருத பழம் நழுவல.

இந்த அரிய பெரும், பாக்கியத்திற்கு, ஓர் இருபது ஆண்டுகள்! சற்று கடும் முயற்சி செய்யலாமே?

அறியும் படிப்பு, பட்டம், பதவி, பணம், இவைகளுக்கு, ஓர் இருபது வருடங்கள்! அலைந்து அலைந்து **பாழானோம்!** அதுவென்ன அலைச்சல்தானே?

குடும்பம், உறவு சுற்றம், தொழில், பணம், போக்கு வரவு! கொடுக்கல் வாங்கல்! என ஒரு உட்கார நேரமில்லாமல், பேரால், ஓடி ஆடி ஓர் இருபது வருடங்கள் **நாம்! பாழானோம்!!** அதுவென் அலைச்சல் தானே?

தன்னை அறிந்து, தான் தானாய், தனித்திருந்து, உங்கள் குரு தேவர்! சொன்னபடி, சிறிய குருசாதகம் செய்து **பாஸ்வரம்** நாம் ஓர் இருபது வருடம்! அவனை ஆவதற்கு **நம்பி** இருக்கலாமே??? கவனம் தேவை!



வேதம் என்பது ஸ்ரீ பகவானே!
வெளியில் தேடி அலையாமல்,
தன்னுள்ளேயே உணர்ந்து
தான் தானாய் இருந்து
அனைத்து நாமரூபங்களும்


சாஸ்திரமே, வேதமாகவும்; வேதமே வேதாந்தமாகவும்
மாறுவது, எப்படி எனில்?
எப்படியோ நாம், ஓர் பந்த ஜீவனாக வந்து விட்டோம்.
இனி ஜனனம்! வேண்டாம் என,
உண்மையின் துடிப்போடு இருக்கும் ஓர் ஜீவன்,
உண்மையின் சாஸ்திரங்களை! கடைப்பிடிக்க
வேண்டும். அதாவது கருவி (ஞானேந்திரியம் ஐந்து)
(கர்மேந்திரியம் ஐந்து) கரண (மனம் புத்தி சித்தம் அஹங்காரமென நான்கு)
ஒழுக்கத்தை! கடைப்பிடிக்க வேண்டும்.
ஒழுக்கம் விழுப்பந் தரலான் - (அவ்) ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் என்றார் திருவள்ளுவர்.
அதாவது, ஒழுக்கம் என்ற கட்டுப்பாடானது,
மிகமிக, மிகமிக மிகமிக, மிகமிக கடினமானதே!
ஆனால் அதுவே எம் உயிர் என்று
ஒழுக்கம் உயிரை விடமேலானது



ஸ்ரீபகவானே! (15)
அந்தந்த வேஷமிட்டு
நடிக்கிறான் என்று,
உணர்ந்த நிலையில்,
பாரபட்சமற்ற **அன்பு**
செலுத்தி, அனைத்தையும்
அனைவரையும் பேதம்
இல்லாமல் வணங்கி பணிவதே **வேதம்**
கற்பதாகும்.

பாது காக்க வேண்டும். அப்படி பாது காக்கப்
பட்டவனுக்கு வேறு உலகியல் சாஸ்திரம்!
தேவை இல்லை என்றே, பிரமாணமாகச்
சொல்லுவோம். இதுவே சாஸ்திரம் ஆகும்.

**கடின** / ஒழுக்கமே **இயல்பாகவே**
அமையும் போது, இறையருள் தானமே சித்திக்கும்.
அங்கு குரு அருளால் இறைவன் நம் உள்ளும்
மற்றும் அனைத்து உள்ளும் உணரும் நிலை,
தானமே சித்திக்கும். இதனை அப்யசிக்கும் ஆன்மா!
**வேதம்**! கற்றவனாகிறான். (வேதம்) படிப்பவனாக மாட்டான்
சர்வார்ப்பணம் என்ற சரணாகதியே!
(எல்லாம் நீயே! எல்லாம் உன்செயல்! எல்லாம் உனதே!)
வேதம் கற்ற நிலையாகும்.



வேதாந்தம் (16)

என்பது. அனைத்து நாமரூபங்களும், நாமரூபம் இல்லாத நிஜமாம், எல்லாம் மண்ணே மண்ணாலேயே ஆனமே! பரமாத்மயமாமே என உணர்வது வேதாந்தம் ஆமே.

வேதமே இயல்பானவனுக்கு, ஓர் ஸத்குரு! அவசியம் வந்தே ஆகவேண்டும். அவனுடைய ஸ்ரீபகவானே ஸத்குருவாய் வருவார் அல்லது ஸ்ரீ ஸத்குருவை காட்டுவார். ஸ்ரீ ஸத் குருவால்

**வேதாந்தம்!!! உணர்த்தப்படுவான்!!!**

அவன் ஓர் ஆத்ம ஞானியாவான்! என்று ஸ்ரீமஹான்களால், கேள்விப்படுகிறோம்.

குறிப்பு:- வேதாந்தம் என்பது கிரந்தம் (பாஷை) அல்ல! படிப்பல்ல! பேசிப்பதல்ல! கேட்பதல்ல! **சாதனா!** ஆகும். வினையால் வரும் எல்லா ஏற்றுக்கொண்டு சோதனையும்! வேதனையும்! இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! எனப்பணிவுடனும், அன்புடனும், அறிவதே சாதனை என்ற வேதாந்தம் ஆகும்.



அதிர்ஷ்டம் என்றால்?

உன் இஷ்டத்திற்கு 17

அது வராது. அது

அதன் இஷ்டப்படி

உன்னிடம் வரும். நீ

வினைமனதோடு இருந்

தால் அது வராது. வினைமனத்

தை நீ விட்டு தயாராகும் நிலை

யில், அது தம் பாதுகையோடு

உன் வினைமனத்தை காலி செய்து விட்டு வரும்.

ஓர் முக்கியம் என்னவென்றால்?

108 வது பாடலில், 5 ஆறு வரிகளை நோக்கவும்.

பேதமுறு இந்த நூலின் புத்தகத்தை,

இவ்வுலகில் பெற்றவர்கள்!

மெத்தவுமே மாபெரும் பாக்கிய சாலிகள்.

அரியவராவார் அதிர்ஷ்ட சாலிகளே.

அதிர்ஷ்டசாலி :— அது இஷ்டப்பட்டு, உன்னை

ஆட்படுத்தி, உன்னுடன் விளையாடுகிறது.

இப்பாடலின் பொருள் :- காவாதீத பரமே!

தம் பாதுகையோடு, உன்னை ஏற்றுக் கொண்டு,

விளையாடியது போதும் என, அரவணைத்துக் கொண்டது.



# பேதமறுத!

இந்த நூல் (18) என்கிறார். இந்நூலில் பேதம் இல்லை. விருப்பு வெறுப்பு இல்லை. குற்றம் குறை இல்லை. இம்மூன்றும் அற்ற நிலையே சுத்த அத்வைதம் என்பர் ஸ்ரீ மஹான்கள்.

20 ஆண்டுகள் இடையறாத ஆன்ம பயிற்சி! வேண்டும் என, வலியுறுத்தி சொன்ன ஸ்ரீ மஹான்கள் உங்களுக்கே, அனுகூலமாக என்ன சொல்கிறார்கள் என்றால்?

உங்கள் குருதேவரின் ஸ்வய ஞானானுபவ நூல் **ஸ்ரீமத் பகவத்கீதை**யின் பாராயண காலம்!

**5 . 7** ஆகும். **இக்காலங்களில் மட்டும் சுமார் ஒரு மணி** நேரமாவது!


(A) நீங்கள் அவசியம் சிரத்தையுடன் பாராயணம் செய்யலாம்

அல்லது

(B) " " புஸ்தகம் திறந்து வாசிக்கலாம் / பார்க்கலாம்

(C) " " " " கண்களை மூடி ஹரி துயில் கொள்ளலாம்.

ஆனால் **அசிரத்தையுடன்** தூங்கி வேண்டாம்! என உங்களின் அன்பரின் பாதம்பற்றி வேண்டிக் கொள்கிறேன் தங்கவயபா.



உங்களுக்காகவே
உங்கள் குருதேவா!
ஒலமாக
அபரம்
ஒலியை ஒலிக்கிறது
எனமட்டும் உணருங்கள்
இத் தருணத்தை நழுவ ?????????
உங்களிடமில்லையே?
அவர் ஒலிப்பார்! ஒலியாத இருப்பதால்
அது இறை ஒலியல்ல
அவரவர் நீங்! கண்டும்
அவரவர் இயலாநிலை! கண்டும்
நீர்க்கதி பரிபூரண சரணாகதி நீங்! கண்டும்,
அவசியம் அது பரகருணை நிதியில் தன்காரியத்தை பண்ணும்.
நீங்கள் அசிரத்தையுடன் தூங்கிவிட்டால்!
அதுவும் பொறுப்பல்ல! அவருக்குப் பொறுப்பல்ல! அவனும் பொறுப்பல்ல!
உங்கள் அனைவருக்காகவும், அதுவே தருணமாயொரு தம்பர ஒலியை தொடுத்தது
கலியுக நிவர்த்திக்காக இலகுவாகவும், எளிதாகவும்!
இயல்பாகவும்! உங்கள் அறிவாணத்துக்கு செல் இதை எனமட்டும்
உணர்ந்தால் போதும். நம்பிக்கையே! பலம்! பலன்!



மனப்பாடம் (20)
என்பது மனதிற்கே
பாடமாகும். அது
அறிவின் உணர்வு
பாடமல்ல. அவ்
வுணர்வின், பாடம்
இயல்பாகவே, உங்களுக்கு சித்தியாகும்
போது.

மேலும் 108 உபதேசபாடல்களும், வரிசைக்
கிரமமாகவும், ஒன்றுடன் ஒன்று தொடர்புடை
யதாயில், கோர்வையாகவும், எளிய முறையில்,
அப்படியே, ஒருபுடையதாகவும், பொதுவாக
பாடல்களே கருத்தாகவும், கருத்தே பாடல்களாகவும்,
நாமரூப நுகர்ச்சிகள் இல்லாமலும்,
சுகமின் மயக்க போதை இல்லாமலும்,
மனதைமாய்த்து, மனதை வென்று, மனதைகொன்று,
மனதை மறுத்தாக்கி, மனதொருமையுடன்
என்ற அரிய கருத்துக்களும் மனமும்,
நிலையையே, போதிப்பதாயும், இதை அப்படியே
ஒப்புவிக்கும் நிலை என்றால் அதுவே நீங்கள் உள்ளீர்கள்.
எனவாம், பிரமாணமாக சொல்லுவோம் கருணையாம்.



இகோர உ குணா!

எழுச்சி, முழுமையாக அடங்கி அழிந்து, அமைதியின் ஆனந்தம் இயல்பாகும் அதை, அனுபவத்தில் தான் உணர முடியும். மனதின் இனிமைத் தன்மையும் ஒழிந்து நாசமாகிவிடும்

முகவுரையின் முடிவு!


ஸ்ரீம்தாயுகைையே! உங்கள் ஸ்வயஞானுபவநூல் ஆகும்

ஸ்வய ஞானுபவ நூலின் நூற்றி எட்டு உபதேச பாடல்களும் ஆதி வேதாந்தமாகிய சிவாகமத்தின் சாராம்சம், ரகசியம்

ஆகும் என்பது பிரமாண சத்தியமாகும்.

இப்போது உபதேசமே! மோக்ஷியமாகும்.

நீதாகணின் அனுபவம்! இப்போது மோக்ஷியமே.



# கருத்தை 22

சுவையுங்கள்

உங்கள் இல்வாத வாழ்வின் சுவை இன்ப துன்பம் அவஸ்யம் தேவை. பாடம் மட்டுமே சுவைக்காது இன்பதுன்ப நுகர்ச்சி. உங்களை விட்டு அகலாது. இது சத்தியம்.

# சாராம்ஸ்ரஸாம்சத்தை!

பருகி விட்டால் ஸ்வய! அனுபவம்! இயல்பாகவே! எம் முயற்சியும், பயிற்சியும் இல்லாமலே, சுபமாகவும்! அதிசுலபமாகவும்! உங்கள் அனைவரையும் ஆக்கிவிடும்.


அனுபவ பாடல்! கட்டாயத் தேவை இல்லை! அனுபவம் பெறும் பாடல்! அவஸ்யம் தேவை. அந்த 108 பாடல் களையும்!

மனப்பாடம் பண்ணும் பயிற்சி இல்லை. 108 பாடல்களின் உள் கருத்தை

சுவைத்து! சுவைத்து! சுவைத்து! சுவைத்து! சுவைத்து! சுவைத்து! சுவைத்து! சுவைத்து!

# உண்டு, உறங்குவதே!

ஸ்வய அனுபவம் பெறும் நியாதம் மனப்பாடம் வேண்டாம். அனுபவ உணர்வு வேண்டும். ஸ்ரீ பாபா.




# ஸ்வயஞானுபவ நூலாகிய
# ஸ்ரீமத்பு கீதையின்
# பாடல்களும் கருத்துரையும்

(1)

சுத்த ஸிதாஹாயமதாய் எந்தவஸ்து,
சுதந்திரமாய் தமது பரசக்தியோடு,
பக்தரெல்லாம் உய்யும் வண்ணம் கருணையாலே,
பரதத்வ வடிவாக திரண்டெழுந்தே,
அத்வைத ஆனந்தம் உணர அனுபவத்தின்,
அதிசயமிங்கு எல்லோரும் அறியும்வண்ணம்,
நித்தமுமே ஆனந்த நடனம் செய்யும்,
நிதம் அந்த வஸ்துவினை நினைவில் வைப்போம்.

குறிப்பு:— தத் த்வம் அஸி என்பது தத்பத பரமாத்மாவும், த்வம்பத ஜீவாத்மாவும், அஸிபத பரத்திற்கு அன்னியமன்றி, பரதத்வம் என்பது பரசொரூபமே கருணையால் பரமாத்மா ஆகவும் ஜீவாத்மாவாகவும் இருந்து வருகிறது என உணர்க.


24



**கருத்து**:— ஸத்தியமான இருப்பை உடையதான, அந்த பரசொரூபம், சுதந்திரமாய் இருக்கும், தம் இருப்பை விட்டு, தம் நிழலாகிய, யோக மாயாவுடன், இணைந்து கொண்டு, பர கருணை நிலையில், கருணையின் ஸ்ரீபகவானாக; அதாவது செயலற்றபரம், செயலுற்ற ஸ்ரீபகவானாக, இந்த ஜீவர்களை, கடைத்தேற்றும் நிலையில், அதிசயமாக ஸ்ரீபகவானும், மாயாவுமாக, ஆனந்த களிநடனம் புரிந்து கொண்டு, வந்த தன்மையால், அந்த பரவஸ்துவை, போற்றிப் பணிந்து வணங்குவோமாக.

2

அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மாதானே,
அழியாமல் இருப்பதனால் ஸத்தும் ஆகும்.
அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மாதானே,
அனைத்தையுமே விளக்குவதால் சித்தும் ஆகும்.



25

அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மாதானே,
அகிலர்க்கும் பிரியமதால் சுகமும் ஆகும்.
அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மாதானே,
அந்தம் இல்லாது இருப்பதனால் அனந்தமாமே.

<u>கருத்து</u>:— அறிவே ஆன்மா. ஆன்மாவே அறிவு. ஆன்மாவே பரம். பரமே ஆன்மா. அந்த அறிவு சொரூபமான ஆன்மா, <u>இருக்கிறது</u> என்ற இருப்பு தன்மையினால், <u>ஸத்தாகிறது</u>. அந்த அறிவு சொரூபமான ஆன்மா, அனைத்து <u>நாம ரூபங்களாக</u> இருந்து அசைந்து இயங்குவதால் <u>ஸித்தாகிறது</u>. அந்த அறிவு சொரூபமான ஆன்மா, அனைத்து நாம ரூபங்களாக, இருந்து இயங்குவதால், (அசைவதால்) சுகம் உண்டாகிறது. அது எண்ணுதால் துக்கமாகவும் மாறுகிறது. அது பிரியம் என்ற பாசமாகவும் மாறுகிறது.






அந்த அறிவு சொரூபமான ஆன்மா;
ஆதியும்! அந்தமும்! அதாவது வந்ததும்,
போவதும், இல்லாமையினால் அனந்தமாய்
(நாமரூபங்களாய்) காட்சி அளிக்கிறது.

3

ஆன்மாவில் கல்பிதமாய் காண்பதெல்லாம்;
ஆன்மாவுக்கு அயலாக என்றும் இல்லை.
ஆன்மாவுக்கு அயலாக பிரம்மம் இல்லை.
அப்பிரம்மம் தமக்கு அயலாக ஆன்மா இல்லை.
ஆன்மாவே பிரம்மமதாம் பிரம்மம் தானே;
ஆன்மாவாம் அனுவும் இதில் ஐயம் இல்லை
ஆன்மாவாம் அகம் பிரம்மம் என்றெப்போதும்
ஆன்ம பர ஐக்கியமே அறிய வேண்டும்.

கருத்து :— ஆன்மாவே பிரம்மம். பிரம்மமே
ஆன்மா. ஆன்மா என்றவொன்னே நாமரூப
ஜக, ஜீவனாய்த் தோற்றுகிறது என உணர்.
(ஆவரணமாய்)




அப்படியானால், நாமரூப ஜகத் ஜீவ தோற்றம்
எல்லாம், ஆன்மாவுக்கு அயலாக இல்லை.
நாமும், ஆன்மாவுக்கு அயலாக என்றும் இல்லை,
ஆன்மாவும் நமக்கு அயலாக என்றும் இல்லை.
அப்படியானால், நாமே ஆன்மா. ஆன்மாவே
நாம் என்ற பிரம்மான்ம பாவனையை செய்வாயாக.

---

4

விரிந்த ஜகத் காரணமாம் விதி இல்லாததால்,
விசித்திரமாய் பகுப்புற்ற ஜகத்தே இல்லை.
தரந்தரமாம் ஜகத்தில்லாத் தன்மையினால்,
தயங்கும் ஜகத் பாலகனும் ஹரியும் இல்லை.
பொருந்தும் சராச்சரமெனவையும் இலாமையா
புகலும் ஜகன் நாசகனும் ஹரனும் இல்லையே.
நிரந்தரமாய் நிறைவுற்ற ஆன்மா ஒன்றே;
நிச்சலமாய் நிலைத்ததனை நிச்சயிப்பாய்.




(28)

கருத்து :— பரந்து விரிந்த நாமரூப ஜக
ஜீவ, தோற்றம் இல்லாத தன்மையினால், அதை
உண்டு பண்ணினேன் எனச் சொல்லும்,
பிரம்ம தேவனும் இல்லை. அடுக்கடுக்கான
உலகங்களும், அதில் ஜீவர்களும், இல்லாத
தன்மையினால், அவைகளை காத்து ரக்ஷிக்
கும் நாராயணனும் இல்லை. உலகமும்,
ஜீவர்களும், இல்லாத தன்மையினால்,
பழையன வற்றை, புதியனவாக்கும் அழிப்
பை, தொழிலாக கொண்ட சிவபெருமானும்,
இல்லை. நிரந்தரமாயும், பூரண நிறைவாகியும்,
உள்ள ஆன்மாவே, எங்குமாய், ஏகமாய்,
இருக்கிறது என, உறுதி செய்வாயாக.

(5)


அந்தமில்லாத் தன்மையினால் ஆதிஇல்லை.
ஆதிஇல்லாத் தன்மையினால் அந்தம் இல்லை.
சொந்தம் இல்லாத் தன்மையினால் தோற்றமில்லை.
தோற்றம் இல்லாத் தன்மையினால் சொந்தமில்லை.




29

புந்தமில்வாந் தன்மையினால் வீடும் இல்லை.
பரவிய வீடு இன்மையினால் பந்தம் இல்லை.
சந்ததமும் ஸின்மயமாம் ஆன்மா ஒன்றே.
சுவியரத வஸ்து என நிச்சயிப்பாய்.

கருத்து :— அந்த ஒன்றுக்கு ஆதியும் இல்லை. அந்தமும் இல்லை. எந்த நாம ரூப தோற்றமும் இல்லை. அதாவது அந்தபரசொரூபம், வந்ததும் இல்லை. அது மறைந்ததும் இல்லை. அது இருந்தது என்றோ, இருக்கிறது என்றோ. சொல்வாரும் இல்லை. ஏற்பாரும் இல்லை. அது தாம் தாமாய், தமக்கு அன்னியம், ஏதும் இலாததாய், சுகானந்தமாகவே, சும்மாவே, இருக்கிறது. என ஆதிஸ்ரீ மஹான்களால், (அதன் அம்சமானவர்களால்) பேசப்படுகிறது. அது சுகானந்த சொரூபமாகவும், தான் தானாயும்,



இருப்பதனால், எத்தோற்றமும் இல்லாமையினால், சொந்தம் என்ற வார்த்தைக்கு இடமே இல்லை. சொந்தம் இல்லாமையினால், பந்தம் என்ற, வார்த்தைக்கு இடமே இல்லை. பந்தம் இல்லாமையினால், பந்த நிவர்த்தியினால் பெறும், மோக்ஷ வீடும் இல்லை. அதாவது மோக்ஷமும்; மோக்ஷ சாதனையும், (தேவை) இல்லை. அதற்கும் காரணம்:– எந்த நாமரூப/ தோற்றங்களும் இல்லவே இல்லை. உதாரணமாக சொல்வது என்றால் எப்பிரயோஜனமும் இல்லாத, வெறும் மண்ணைதவே/ அது இருக்கிறது என, ஸ்ரீ ஆதிமஹான்கள் வாயிலாக அறிகிறோம். ஆகவே ஸத்தாகிய அந்த ஒன்றே/ சவியாக வஸ்து என, நிச்சயித்து சவிக்கும், மனதின்/ துன்பத்தை நீக்குவாய்.






6

பயன் எவையும் விரும்பாமல் பலஜன்மத்தில்;
பழுதறவே அனுஷ்டித்த அறங்களாலே;
அயல் அணுவும் மருவாமல் மனதின் சுத்தி;
மன்னியதால் சாதனம் ஓர் நான்கும் பெற்
இவ்வுடனே இயற்றியிடும் சிரவணாதி றோர்;
ஏதுவினால் பரப்பிரம்ம ஞானம் பெற்று;
அயல் அணுவும் அணுகாத அகண்டமான;
அத்வைத பரப்பிரம்மம் ஆவரன்றே.

கருத்து :— பலபல ஜன்மங்களில், பலன் கருதாமல் செய்த தர்மமானது! இச்ஜன்மாவில், முழுமையாக பூர்த்தி ஆனதன்மையினால்; இச்ஜன்மாவிலும்;
(A) நிஷ்காமிய கர்மா. (B) நிஷ்காம்ய பக்தி.
(C) சர்வார்ப்பணம். (D) பிரம்மார்ப்பணம்.
ஆகிய இந்த நான்கு சாதனைகள் மூலமாக;
எம் ஸ்ரீ ஸத்குருவின்! ஞான பாடமானது;




32

சிரவண, மனன, நிதித்தியாசனத்தால்,
கடினம் இல்லாமல், இயல்பாகவே தமக்கு
அன்னியம், எதும் எவரும் இல்லாத நிலையில்,
அத்வைத ஆனந்தம் கிட்டும்.

(7)

இத்துவைத ஜகத்தையும் விவகாரத்தில்,
யாவர்க்கும் எதிராகத் தோற்றவாவே,
ஸித்தினது விவர்த்தமதாம் சித்தம் தானே,
ஜகம் என தோற்றுகிறதென சிலபேர் சொல்வர்.
சித்தமதை நன்றாக விசாரிக்கும் கால்,
ஸின்மயமாம், பிரம்மமல்லால் இவவே இல்லை
புத்திரனே, ஆதலினால் எக்காலத்தும்,
பூரணமாய் உளது பரப்பிரம்மம் ஒன்றே.


குறிப்பு:- ஸித் சொரூபமே, சித்தமதாய் வடிவெடுத்து,
நாமரூப ஜக ஜீவர்கள், தேகேந்திரிய ஷித்த ஹிரியாதியதும்
அவ்விரியாட்டைப் பூர்த்திக் கொண்டு, ஸித்பரமாய் ஆகிக்கொண்டிடு



33

கருத்து :- கொழுந்தே! இந்த துவைதமாக தோற்றும், நாமரூப! ஜக ஜீவர்களானது! விகார காட்சியினலும்; விபரீத வார்த்தையினலும்; நேருக்கு நேராத, தோற்றுவதினலும், விவகாரம் (பிரச்சனைகள்) உருவாகி, தாரசாரமாக! நடைபெறுவதால், இவைகள், ஸத்தியமாக தோற்றுகிறது. ஆனல் உண்மையல்ல.


காரணம் :- ஸத்தாகிய பரமே; ஸித்தாக மாறி அதாவது, அசையாததே, அசைவதைப் போல் தோற்றி. அந்த ஸித்ஸொரூபமே! சித்தமாக! மாறிவிளையாடுகிறது. இங்கு ஓர் உண்மை என்னவென்றால்? தெய்வீக நிலையில் ஸித் என்றும்; லௌகீக நிலையில் சித்தம் என்றும், ஸத்தான அந்த ஒன்றே, தமக்குத்தானே, இயங்கி விளையாடுகிறதென்று உணரவும்.



லௌகீக ஜீவர்கள், சித்தம் வசப்பட்ட
தன்மையினால், உலகமும், ஜீவர்களும்,
உண்டு என விதற்றுகின்றனர். அதை
ஸத்தின், ஸித்தாக, உணர்ந்தவர்கள்,
மட்டும், முக்காலமும், எக்காலமும், எல்லாம்
பூரணப் பிரம்மமே என்று சும்மா சுகமாக இருக்கின்றனர்.


(8)

புத்தியினால் உறுதியிடும் பொருளும் இல்லை.
புரைமனதால் மனனமிடும் பொருளும் இல்லை
சிந்தையினால் சிந்திக்கும் பொருளும் இல்லை.
செறிவாக்கால் வசனிக்கும் பொருளும் இல்லை
சொந்தமதாய் தோற்றியிடும் பொருளும் இல்லை.
துவைதத்தால் தொடர்கின்ற பயமும் இல்லை.
சந்ததமும் ஸின்மாத்திர சுபாவமாகிச்
சலியாமல் உளது பரப்பிரம்மம் ஒன்றே.



35

கருத்து:— உன் புத்தியினால், இதுதான்! என்று,
உறுதியாக எண்ணும், நாமரூப எந்தப் பொருளும் இல்லை.
உன் மனதால், இதுதான் என, மனக் கணக்கு
போடும், எந்த நாமரூப பொருளும் இல்லை.
உன் சித்தத்தால், இது நம்முடையதே என,
சிந்திக்கும், எந்த நாமரூப பொருளும் இல்லை.
இம்மூன்றினாலும், எண்ணி, எண்ணி, உன் வாக்கால்
புலம்பி புலம்பி, பிதற்றும் எந்த நாமரூபமும் இல்லை.
இந்த நான்கு நிலைகளினாலும், உனக்கு அன்னியமாய்
அதாவது, துவைதமாக! தோற்றுவதால்,
ஏற்படும் மனோமய பீதி, பயப்பிராந்தியும்
இல்லவே இல்லை. காரணம்:— எந்த ஒன்றையும்,
எங்கும், எதிலும், அனந்தமாய், இருக்கிறது
என்ற, இருப்புத் தன்மையை மட்டும் உடையதான,
பரமாகிய மண்ணே! இருக்கிறது என்பதை
நம்பிப்பாயாக.




36

9

நினைவெதுவோ அதுதானே ஜீவனாகும்.
,, ,, ஈசனாகும்.
,, ,, ஜகமும் ஆகும்.
,, ,, மனதும் ஆகும்.
,, ,, நாமம் ஆகும்.
,, ,, கர்மா ஆகும்.
,, ,, துக்கம் ஆகும்.
,, ,, அனைத்தும் ஆகும்.

கருத்து:-

மனதின் கற்பனையே பந்த ஜீவனாகும்.
,, ,, திரிகர்த்தாக்களாகும்.
,, ,, நாமரூப ஜகத்தோற்றமாகும்.
,, ,, மனம், புத்தி, சித்தமாகும்.
,, ,, தீராத காம மோஹமாகும்.
,, ,, புண்ணிய பாப வினையாகும்.
,, ,, கலக்க பய துக்கம் ஆகும்.
,, ,, ஸர்வா துக்கமயக்கம் ஆகும்.
,, ,,




10

நினைவின்றி நிற்பதுவே அகண்டமாகும்.
” ” நிஷ்டையாகும்.
” ” ஞானம் ஆகும்.
” ” மோக்ஷம் ஆகும்.
” ” சகஜ ஞானமாகும்.
” ” பிரம்மமாகும்.
” ” சிவமும் ஆகும்.
நினைவனுபவம் இல்லாளவே வாம் பிரம்மம் தானே !!!

கருத்து:—

மனதின் ஸங்கல்ப நாசமே அகண்டானந்தம் ஆகும்.
” ” ” நிஷ்டையானுபவமாகும்.
” ” ” ஆத்ம ஞானம் ஆகும்.
” ” ” ஜீவன் முக்தி ஆகும்.
” ” ” சகஜானந்தம் ஆகும்.
” ” ” பரப்பிரம்மானந்தம் ஆகும்.
” ” ” சதாசிவம் ஆகும்.
” ” ” பரப்பிரத்தியக்ஷானந்தமயமாகும்.




38

11

திருசியமே ஒன்றுமில்லா திருக்கேயாகி,
இயங்கும் மனோவிகல்பமில்லா நிலைநின்றோர்க்கு,
மருவியிடும் நனவு கனா சுழுத்தி இல்லை.
மரணமில்லை! உய்வதில்லை! மற்றொன்றில்லை!
பிரிவறவே மனது வெறுத்திருக்கும் நிஷ்டை(யன்)
பெருமையினை என் சொல்வோம் என்றிவ்வண்ணம்,
பரிவுடனே ரிபு முனிவன்! நிதாகனுக்கு,
பரமார்த்த உறுதியினைப் பகர்ந்தானன்றே.


கருத்து :— இதன் முக்கிய கருத்து யாது எனில்?
காண்பவனாக இரு. காணும் பொருள் ஆகாதே.
என்றார்கள் அனுபவ ஞானிகள்.

(A) காண்பவனாக இரு :— ஆத்மாவாக இரு.
அறிவாக இரு. சாட்சியாய் இரு. பேதம்!
விருப்பு வெறுப்பு குற்றம் குறை (காணாதவனாக) இல்லாதவனாக இரு.
பொதுவாக எக்குணமும்! அற்றவனாக இரு.
சபலம்! சலனம்! சந்தேகம்! இல்லாதவனாக இரு.



39


B) காணும் பொருள் என ஆகாதே:— இதன்
மொத்தமாக சொல்லும் ஒரே பொருளாவது:—
நாம ரூப, ஜக ஜீவ, எந்த தோற்றமாகவும்,
இராதே. என்பதாகும். அப்படி இருந்தால் (உணர்ந்தால்)
வினை பின்னிவிடும். ஜனனமரணமும் உண்டு.
மேலே சொன்ன நிலையில், காண்பவனை இருந்தால்,
நனவு, கனவு, உறக்கம், ஆகிய இம்மூன்று
அவஸ்தைகளும் நாசமாகும். உயர்வும்
தாழ்வும் இல்லை. ஜனன மரணம் இல்லை.
மனம் தனித்த நிலையில், ஒன்றுமில்லாமல்,
அதாவது, எந்த எண்ணமும் இல்லாமல்,
சகஜமாகவே, எப்பயிற்சியும், முயற்சியும்,
இல்லாமல், சகஜசமாதி கூடலாம். இவன்
பெருமையை, புகல எங்கும், எவரும் இல்லை.




௨

எள்ளளவும் அயலின்றி எல்லாம் என்றும்,
ஏகபரப்பிரம்மமதாய் இருந்த போதும்,
கள்ள முறும் மனதுடையோர் பரசிவத்தின்,
கருணையில்லா குற்றத்தால் வேறு வேறாய்,
உள்ளமதில் உணர்ந்து மஹா பவதுக்கத்தை,
உறுவதனால் முமுட்சுவெல்லாம் எவ்விதத்து
நள்ளவொண்ணா பரமசிவம் கருணை பெற்றே, டம்
தமது பவதுக்கத்தை தவிர்க்க வேண்டும்.

கருத்து:— எள்ளளவாவது, அப்பிரம்மமாகிய ஆன்மாவுக்கு, அன்னியமாய் ஏதுவும், எவரும், எந்த நாமரூபத்துடனும் இல்லையென்பதே ஸத்தியம். அப்படி இருந்தாலும், கள்ள மனம் உடையவர்களுக்குமட்டும், ஸ்ரீபகவான் கருணை கிட்டாத தன்மையால், பிறவித் தொல்லை நீங்குவதில்லை. ஆகவே, ஆத்ம ஞானப்பயிற்சி பெறும் ஒவ்வொருவரும், அவஸியம் ஸ்ரீபகவான் கருணையைப் பெற்றே ஆகவேண்டும். இல்லையேல் ஜீவன்முக்தி இல்லை.




41

கருத்து:-

கள்ள மனம்! உள்ளவர்கள் ஸ்ரீபகவான்! கருணையை! பெறமுடியாது:- கள்ள மனம்:- பொய்ம்மை வாட்டமான. அதுவும், மண்ணுவான, ஆக! ஜீவ! தேகாபிமானத்தையும், பழக்க வழக்க தோஷத்தினாலும், மூர்க்க எண்ணத்தினாலும், இவைகளின் நான் எனது! விடாமையினாலும், ஸ்ரீபகவானிடமே! எதிர்பார்ப்பு! என்ற வியாபாரம் விடாமையினாலும், இன்பதுன்பத்தின், புண்ணியபாபமான, கர்மாவை விடாத மனம் **கள்ளமனம்!** ஆகும் என உணர்த்த.

நல்லமனம் (அறிவு):- எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடையது எல்லாம் உனதே! என்று தியாக, ஜீவ கர்த்ருத்வம்! அழிந்தால்; அது ஈசகர்த்ருத்வம் ஆகும். இந்த **சர்வார்ப்பணம்** உள்ள நல்லமனமாகும். ஜீவகர்த்ருத்வம்! அழிந்த மறுவிநாடியே உள்ளம் **பண்ணாம்!** எனஆகும் நல்லமனமாகும் மறுவிநாடியே ஸ்ரீபகவான் கருணை பிரவாகம் அப்பூர்ணத்தில் நிறைந்து விடும் இதுவே ஸ்ரீபகவான் கருணையை பெறும் மார்க்கமாகும்.

பாபா




12

கள்ளமனம் :- இது கலியின் கோரமாக இருப்ப(தால்),
ஸ்ரீ மஹான்கள், வலியுறுத்தி கூறுவதாவது :-
காம காஞ்சன (பெண், பணம்) ஆகிய இந்த
இரண்டு ஆசைகளையும், விட முடியாத மனமே,
கள்ள மனம் ஆகும்.

---


13

சித்தமென ஒருபொருள் இங்கு உள்ளதென்று,
சிறிதேனும் சிந்தித்தால் உடனே ஸித்தே,
சித்தமதாய் தோன்றியிடும். அதுவே ஜீவ,
இகபரமாய் தோன்றுவதால் துன்பம் உண்டாம்.
புத்திரனே, ஆதலினால் சித்தம் என்றோர்,
பொருளொன்றும் இலை
யெனவாம் ஸித்தேஎன்றும்
இத்திறமாம் உறுதியினால் சித்தம் தன்னை,
எளிதாக ஜெயித்தென்றும் இன்பம் சார்வாய்.





கருத்து:— நாமரூப கற்பனை பண்ணுவது மனம். அதன் கர்மாவின் இயக்கமாக இருப்பது புத்தி. அதன் இயக்கத்தை உறுதிபண்ணுவது சித்தம். ஆனாலும் இம்மூன்றும் ஒன்றே. (குழந்தை வத்தியில் முன் வத்தி/பின் வத்தி/யென வித்தியாசம் இல்லாதது போல) இதன் உண்மை என்னவென்றால்? அசையா இருப்பு நிலையில், ஸத்தாகும். அது மற்றொன்று போல் பிரகாசிக்கும் போது, அதுவே ஸித்தாகும். அதுவே, அசைந்து இன்பதுன்பம் உண்டாகும் நிலையில், சித்தம் என ஆகும். ஆகவே ஸித் வேறு. சித்தம் வேறல்ல. தோற்றம் மட்டும் ஸித்தாகும். தோற்ற நாமரூப இயக்க குணம் சித்தம் ஆகும். ஆகவே நாமரூப சித்தத்தின் நிலையில், ஜகத்தை நோக்க வேண்டாம்.



24


அதனை நாமரூபமும் | குணமும் பின்னவிட்டு
ஜனனமரண துன்பத்தை உண்டுபண்ணும்.
ஸத்தே சித்தாகும். சித்தே ஸத்தாகும்.
ஸத்தே (ஆன்மாவே) நாம் ஆகும் என உறுதி
பண்ணி, மனோ சஞ்சலத்தை நீக்குவாயாக.

---


14

நரர் சுரராய் திரியக்காய் நகவரதி,
நாநாவாய் நாடியிரும் நாட்டமெலிவாம்.
தெரிவுருவாய் திகழ்கின்ற தேவதேவன்,
திருவுருவே என்று திடத்தியானம் செய்து,
இருகுணமும் இழந்து அமலஸத்வம் மேவாய்,
இருக்கின்ற சூட்சுமமதை விருத்தி கொண்டே,
பரமசிவம் பரிபூரணசொரூபம் தன்னை,
பார்த்திடலாம் மற்றென்றும் பார்க்கவொண்ணா.

45




கருத்து:— சூட்சும ஸ்ரீபகவானை/காணும் நிலையை
இப்பாடல்/வலியுறுத்துகிறது. மனம்படைத்த/
மனித இனம் உட்பட 84 லக்ஷம் ஜீவ
கோடிகளிலும், அந்தந்த நாமரூப/புண்ணிய
பாப/வேஷங்களை, தாங்கிக்கொண்டு, பார
பக்ஷம் இல்லாமல்; அவரவர் கர்ம விகிதாச்சாரப்
படி/விதியின் திட்டமிட்ட காரியங்களை, அனுப்
பிசகாமல், ஒழுங்காக ஸ்ரீபகவானே/தம்
லோக மாயா விளைவில்/நடத்தி நடிக்கிறான் முடிக்கிறான் என்றும்,
நடத்துகிறான் என்றும், இதில் எவர் மீதும்/
எதன் மீதும்/குற்றம் குறை/இல்லவே இல்லை,
என்றும்; குறைபாடெல்லாம் நம் மனதிடமே/
அதுவும் பழக்க (பேச்சு) வழக்கத்தால் (செய்கை)
வந்தது/என்றும், அறிவுபூர்வமாக



உணர்ந்து விட்டால், அங்கு மனதிற்கு வேலையில்லாமல் போய்விடும். அதனால் மும்மலமும் (ஆணவம், கன்மம், மாயா) உன் மனதைவிட்டு நீங்கி, அமல மனம் என ஆகிவிடும். இங்கு சூட்சும மறைவிருத்தி என்று எதைச் சொல்கிறார் என்றால்?

சூட்சும மறைவிருத்தி:- எள்ளினுள் எண்ணெயும், பாலினுள் வெண்ணெயும், ஜலத்தினுள் உப்பும் எப்படி சூட்சுமமாக மறைந்திருக்கிறதோ! எப்படி உன் முயற்சியினால், அவை எப்படி வெளிப்படுகிறதோ! அதேபோல, அனைத்து நாமரூபங்களிலும், அவன் இருக்கிறான், என்ற மெய் உணர்வை பெருக்கி, நாமரூப அசைவின் பொய் உணர்ச்சியை (எமோஷன்/டென்ஷன்) நாசம் செய்தால்;




(47)

அனைத்து நாம ரூபங்களிலும் மறைந்திருக்கும்
மறைந்திருக்கும் ஸ்ரீபகவான், அவஸ்யம்
வெளிப்படுவான். வெளிப்பட்டே ஆகவேண்டும்
அப்படி வெளிப்படவில்லையானால் ஸ்ரீபகவான் உண்டு
என்ற, ஸத்தியவாக்கு பொய்யாகிவிடும்.
இங்கு தாவத்தால் பணிவும்! மனதில் அள
வற்ற பொறுமையுமே உன் சாதனையாகும்.

(A) தெய்வம் தோன்று (த) துணைவன்:- தெய்வம்
நேருக்கு நேர் தோன்றாமல், உன் எதிரில் வரும்,
நாம ரூபம் மூலமாக, தோன்றுகிறான்.


(B) தெய்வம் மனுஷ்யாவதாரம்:- தெய்வம் மனித
வடிவில்தான், இக்கலியில், வர வேண்டும் என்ப
து நியதி! அங்கு உன் சாதனையை அனுசரித்தே
நேரில் வந்தே ஆகவேண்டும். அங்கு தெய்வத்தோடு,
கூடிக் கொஞ்சலாம்! குலாவலாம்! விளையாடலாம்! உன்
குழந்தையின் நிலையில், தெய்வத்தோடு அனுபவிக்கலாம்.



15


மித்தையென்னும் சித்தமுமே என்றும் இல்லை.
மிகப் பொய்யாம் ஜகமுதலும் என்றும் இல்லை.
மித்தையென்னும் வார்த்தையுமே என்றும் இல்லை.
மிக மிகவும் மூடரென்னும் ஜனமும் இல்லை.
ஸத்திய ஸித் சுகபரமே எல்லாம் என்றும்;
சந்ததமும் அப்பிரம்மம் நாமே என்றும்;
இத்திறமே திடமான முயற்சியோடு;
எப்போதும் சிந்தித்து சாந்தனுவாய்.

கருத்து:- மித்தையென்றல், பொய்யான ஓர் தோற்றம்/ என பொருள்படும். அதாவது ஒன்றாய் மற்றொன்று/ தோன்றுவது மித்தை ஆகும். கட்டையில் வந்த கள்வனும்/ கயிற்றில் வந்த சர்ப்பமும்/ சிப்பியில் வந்த வெள்ளியும்/ நிரந்தரம் அல்ல. சாஸ்வதமும் அல்ல. உண்மையல்ல. அது மனோ பிரட்சியே ஆகும்.





அதேபோல், மண்ணாகிய பரமே ஸத்தியம்.
மண்ணில் வந்த பாண்டம் ஸத்தியமும், ஸாஸ்வதமும்
அல்ல. இங்கு மனதின், கவர்ச்சியினால், நாம
ரூப பாண்டம், மனதில் நிலை பெறுகிறது. ஆனால்
இயல்பாக, என்றும் உள்ளதான, ஸாஸ்
வதமான, ஸத்தியமான, மண், மனதில்
நிலை பெறுவதில்லை. இதன் உண்மை என்னவென்றால்
கண்ணால் கண்டால் மட்டும், நம்புவது மனம்.
அதாவது தூல நாமரூபங்களை மட்டும், நம்புவது
மனம். ஆனால் சூட்சுமத்தை (கண்ணால் காணாததை)
உணர்வு நிலையில் உணர்வது அறிவாகும்.
தூலநாமரூபங்களை, கண்டு கண்டு, மனதில் பதிவேடு,
செய்வதால், நாமரூப, ஜனனமரணம் தொடர்கிறது.



50

சூட்சுமத்தோடு, அறிவு ஒன்றி நிலைத்து
விடுவதால். அங்கு நாம ரூபம் இல்லாத
தன்மையினால், நாமரூப சம்பந்த ஜனன மரணமும்
இல்லாமல் போய் விடுகிறது, என உணரவும்.

ஆகவே?


பொய்யான கற்பனை பண்ணும் சித்தம் இல்லவே இல்லை.
சூட்சுமத்தில் நிலை பெறும், ஸிதம்பரம் (அறிவு)
என்றென்றும் ஸத்தியமே.
சித்தத்தின் கற்பனையில், தோன்றிய நாம ரூப
ஜகமும், இல்லவே இல்லை.
ஸிதம்பரமாகிய, அறிவால் எல்லாம் மண்ணை
உணர்ந்த நிலையில், மண்ணே ஸத்தியம்.
சித்தத்தையும், அதனால் உண்டான, ஜகத்தையும்,
விவஹரித்து, புலம்பும் வாக்கும் பொய்யே.
வாக்கை மனதில் ஒடுக்கி. அம்மனதை அறிவில்
ஒடுக்கி. எல்லாம் ஒன்றாகிய மண்ணே என உணர்வதே
ஸத்தியமாகும்.




அறிவாய்
இப்படி மேலே கண்டபடி, உணர்வால் உணர்ந்து, (மனதால் கண்டவை) இந்த பர சொரூபமே! எல்லாம் என தெளிந்து, அதுவே நாம், நாமே அது என எப்போதும், சிந்தித்து சாந்தமாவாய்.

16

அன்னியமாய் காண்பதெல்லாம் பிரம்மமாத்ரம்,
ஆதலினால் உளது பரப்பிரம்மம் ஒன்றே.
இந்தவிதம் இருந்திடினும் உனக்கிப்போதிங்கு,
இயம்பியிடும் குருசீடர் உலகமாதி.
பின்னமெனத் தோற்றியிடும் இப் பேதமெல்லாம்.
பிரம்மமென்றும்; அப்பிரம்மம் நாமே என்றும்,
உற்ற திட பாவனையால் மனதை வென்று.
மஹத்தான பிரம்மமதாய் சாந்தனாவாய்.





கருத்து:— உன்மனக்கண்ணுள் காணும்,
அனைத்து நாமரூபங்களும், மண்ணாகிய பரமே!
என, ஸத்தியமாக உணர்வாயாக. இதுவே
ஸத்தியமாக இருக்க; இங்கு, இப்போது,
சொல்லும் யானும்! கேட்கும் நீயும்! யானும்;
நீயும்; இணைந்து காணும், இவ்வுலகமும்!
பின்னிப் பின்னி! பின்னிப் பின்னி! தோற்றும்
இப் பேதம் அனைத்தும், மண்ணுக்கு அன்னியமாம்
இல்லை என்றும்; நாமும் அம் மண்ணுக்கு,
அன்னியமாய் இல்லையென்றும், உணர்வால் தெளிந்து
இந்த நாம ரூபங்களை, எப்படி கெடுக்க வேண்டு
மென்றால்? மண்ணே/பரம் என்ற பரபாவனையால்
மண்ணில் எந்த நாம ரூபபாண்டமும் இல்லை என்றும்;
மண் இல்லாமல் எந்த நாம ரூப பாண்டமும் இல்லை,
எனவும் தெளிக.



**17**

நில்லாமல் எங்கும் ஓர் நிறைவாய் நின்ற,
நிகில பரிபூரணமாம் பிரம்ம ரூபம்;
அல்லாமல் ஓரணுவும் எங்கும் இல்லை.
அகிலமுமே அகண்டபரப்பிரம்மமேயாம்.
எல்லாமும் பரப்பிரம்மம்; நாமேயென்றிங்கு,
எப்போதும் பாவித்து, மனதை வென்று;
சொல்லாலும் சொல்லவொண்ணா பரமே (நாம்) ஆகி,
சும்மாவே இருந்து மஹா சாந்தியாவாய்.

**கருத்து:**— உளசிநாட்ட இடம் இல்லாமல், (பார்க்குமிடம் எங்கும், ஓர் நீக்கமற நிறைவாய் நின்ற பரிபூரணானந்தமே! என்ற ஸ்ரீ மஹான்களின் வாக்குக் கிணங்க) எங்குமாய்! எதிலுமாய்! ஏகமாய்! எல்லாமாய்! நிறைந்திருக்கும், பரிபூரண பிரம்மமல்லால், எதுவும்! எவரும் இல்லை. உலகமும் அதில் உள்ள எல்லா நாம ரூபங்களும், அதுக்கு அயலாக இல்லை. நாமும் அதுக்கு அயலாக இல்லை. என்று






எந்த விநாடியும், பாவனை செய். இப்படியே
பிரம்மாண்ம பாவனை, செய்யச் செய்ய, செய்யச்
செய்ய, செய்யச் செய்ய, செய்யச் செய்ய
(அறவாகும்)
மனம் சாகும். அதாவது மனம் மறைந்தாகும்.
உண்மையும், மறைந்தான நிலையில், நீ அதுவாகவே
இருப்பாய். அந்த உன் சுகானந்த அனுபவ
நிலையை, வாக்குவடிவிலோ, வரிவடிவிலோ,
விளக்க எவராலும் முடியாது.

---


(18)

அறைந்த பொருள் அனைத்தையுமே
வாக்கு மாத்ரம்,
ஆக்காமல் ஆதரவாய் மனதில் கொண்டு,
செறிந்த மனது ஒருமையுடன் எல்லாம் என்றும்,
சின்மயமாம் பரப்பிரம்மம் அது நாம் என்றே,



நிறைந்த பரபாவனையால் மனதை வென்று;
நிச்சலனாய் எப்போதும் சாந்தனுவாய்.
அறைந்த தெல்லாம் ஸத்தியமே ஐயமில்லை.
அகண்ட பரசிவம் ஆனை ஐயமில்லை.

கருத்து:– உன் ஸத்குரு வாக்கையுவாய் ஞானமாக கொள்ளாமல்; சிரத்தையின்! அனுபவ ஞானம் என ஆக்கி, அனுபவிப்பாயாக. குறைவற்ற நிறைந்த மனதுடன் ஏற்பாயாக. உன் நிறைந்த பர பாவனையால், மனதை வென்று; (அறவாக்கி) எந்த விநாடியும், சாந்தியின் அமைதி ஆனந்தம் பெறுவாயாக. உன் பரபாவனை என்பது அதுவே நாம்! நாமே அது! என்பதாகும். யாம் சொல்வது எல்லாம் எம் ஸத்குரு வாக்காகும்.




56

19

தீங்கான சித்தம் முதல் எவையுமில்லை.
திருஷ்யமாய் தெரிகின்ற ஜகமும் இல்லை.
அஹங்காரம் முதலிய தோர் அணுவுமில்லை.
அகிலமுமே அகண்டபரப்பிரம்மமேயாம்.
நீங்காமல் எங்கும் ஓர் நிறைவாய் நின்ற;
நிமல அறிவு ஆன பரம் நாம் என்று,
தூங்காது தூங்கும்! நிலை கிட்டுமட்டும்,
தொடர்பாக சிந்தித்து சாந்தனவாய்.


கருத்து:— மயக்கம் தந்து கெடுக்கின்ற சித்தம் இல்லவே இல்லை. கண்ணால் காணக் கூடிய நாமரூப உலகமும் இல்லவே இல்லை. எழுச்சியை உண்டு பண்ணும், அஹங்காரமும் இல்லவே இல்லை. அனைத்து நாமரூப உலகமும், மண்ணாகியபரமே! மலமற்ற பரமே நாம். நாமேபரம்! என்ற இந்த பரபாவனையை! தைலதாரை போல் அப்யாசம் செய்து ஹரிதுயில்! (தூங்காமல் தூங்கும் தூக்கம்) இயல்பாக கிடைக்கும் வரை, அப்யாசிப்பாயாக.



௨௦

மனந்தன்னால் செய்ததுவே செய்ததாகும்.
மற்றொன்றால் செய்ததெல்லாம் செய்ததாகா.
தினம் தினம் திடமான மனதினாலே,
திருஷ்யமாய் காண்பதெல்லாம் திருக்நேயன்;
அனந்தபரப்பிரம்மமென்றும், அதுநாம் என்றும்,
அகண்டபரபாவனையே செய்வாயானால்,
கனந்தரும் அப்பாவனையால் மனதைவென்று,
கலங்காமல் எப்போதும் சாந்தனவாய்.

கருத்து:- மனகற்பனையின், எண்ணமே கர்மாஆகும். தூலத்தால் செய்வது, கர்மா ஆகாது. காரணம்:- மனஎண்ணமே பிறவியின், வித்தாகும். கர்மாவாகும். தூலம் அக்கர்மாவை, முடிக்கும் ஓர் கருவியாகும். ஆகவே, எந்த வினையும், கண்ணால் காணும் அனைத்துநாமரூபங்களும், அனைத்துக்கும் ஆதாரமான மண்ணாகிய, பரப்பிரம்மமே என்றும் நாமே அது என்றும், அகண்ட பரபாவனை செய்து,



58


மனதை முழுமையாக வென்று; கலக்கமயம்!
இல்லாமல் சாந்தியராவாயாக.

---

௨௧


மனதுதான் அவிசார தசையில் மைந்தா!
மயக்கமுறும் ஜகமுதலாய் தோற்றினும்;
மனதுருவை மாறாது விசாரம் செய்தால்;
மற்றது தான் (மனதுதான்) மனோத்தான ஸித்தேயாகும்.
மனதனை எளிதாக ஜெயித்து எய் போதும்;
மனோத்தான ஸித்துருவே ஆக வேண்டி;
மனது முதல் எல்லாம் ஸித் அது நாம் என்றே.
மாறாது சிந்தித்து சாந்தனவாய்.

கருத்து:— மனதை நீயார்? என்று, விசாரணை! பண்ணாத தன்மையினால், இம்மனதில் நாமரூப! ஜகஜீவ / மயக்கம் தோற்றுகிறது.
(மனது அறிவாகிய, ஆன்மா! ஆக்ஷேபக சாதனை)




59

மனதை விசாரணை செய்யும் விதம்:- ஏ மனமே!
நீ அறிவு (ஆத்ம) சொரூபம் தானே? அதாவது
அறிவில் தோன்றிய, மாயாவின் மகன் தானே
அந்த அறிவானது, உன் தந்தை (ஸ்ரீ பகவான்)
சிறிது நேரம், பொம்மை விளையாட்டு விளையாடு
என, இவ்வுலகில் உன்னை அனுப்பி வைத்தான்.
அவன் சொன்ன அறிவுரை:- நடிக்கும் நிலையில்
விளையாடு என்றான். அதுவே கடமை என,
மூழ்கி விடாதே என்றான். உரிமை உடைமை!
வேண்டாம் என்றான். உன்னை விளையாடத்தான்
அனுப்புகிறேனே தவிர பலபல சட்டையை
போட்டு, (மீண்டும் மீண்டும் பிறப் பெடுத்து)
அங்கேயே, விளையாடு என அனுப்பவில்லை.
தாரசார விளையாட்டு வேண்டாம் மனமே.
(மகனே)




அப்படி விளையாடினால், அவ்விளையாட்டை
உன்னால், விடமுடியாது. நீ அனுபவித்த
இன்பமெல்லாம் போதும். அதுவே துன்பமாய்
மாறி நீ அவஸ்தைப்படுவதை, யாம் உணர்கி
றோம்.
எத்தனை மனைவி? எத்தனை புருஷன்? எத்தனை
பிள்ளை குட்டி? எத்தனை அம்மா? எத்தனை அப்பா?
எத்தனை விதவிதமான, கருக்குழி????
எங்கெங்கெல்லாம், போகிறாய்? வருகிறாய்??
என்னென்னவெல்லாம் கொடுக்கிறாய்?
வாங்குகிறாய்?
அடங்காத பிள்ளையை/பெற்று விட்டால்,
உறங்காமல், விழித்திருக்கும் தாய் போல்?
உனக்காகவே/யாம்/காத்திருக்கிறோம் (மகனே?)
மனமே?
என மனம் உருகினால், அம்மனம் உன் வழிக்கு வரும்.
இதில் அம்மனதை/உன் வழியில், திருப்புவது என்றால்?






சர்வார்ப்பணம்! ஒன்றே இக்கவியில்
கை கண்ட! கண் கண்ட! மருந்துவுமாகும்.
மருந்தாகும்.
இப்படி, மனதை மாறாது, விசாரம் செய்தால்,
மனம் உன் சகஜ (அறிவு) சொரூபமாகிவிடும்.
உன் மனம்! புத்தி! சித்தம்! அஹங்காரம்!
அனைத்தும், அந்த ஒன்றுக்கு அயலாக இல்லவே இல்லை.
ஆகவே தான்:- கடைசி இரண்டு வரிகளிலும்.
மனது முதல் எல்லாம் ஸித். அது நாம் என்றே,
மாறாது திரும்ப திரும்ப! சிந்தித்த சாந்தனவாய்.
என்றோர் யத்பாவம் தத்பவதி! என்பது உறுதியாலே.

(22)

மனதென்றும், வாக்கென்றும், மற்றதென்றும்.
(எண்ணம்) (சொல்) (செயல்)
மருவிய இப் பேதமுமே எமக்கிங்கில்லை.
தனவிலுறும் பொருள்களில் எப்பொருள்களோ
காண்கின்ற தமக்கயலாய் கண்டதும் போமோ.






நனவிலும் பொருள்களும் அவ்விதமேயாக,
நாடியிடும் ஞான வடிவான நாமே,
எனும் உரமாம் பாவனையால் மனதை வென்று,
ஏகபர வடிவேயாகி சாந்தனவாய்.

கருத்து :— மனதின் எண்ணம்/ சொல்/ செயல்) ஆகிய இம்மூன்றுமே நாமரூப சம்பந்தம் கொண்டதாகும். அவை கர்மாவை விளைக்கும். ஆகவே இப்பேதம்! எமக்கு இல்லவே இல்லை.

கனவில் காணும் பொருள் நனவில் இல்லை.
நனவில் ” ” கனவில் ”.

ஆனால் இவ்விரண்டுமே, மண்மயமான பரத்திற்கு/ அன்னியமாயில்லை. அப்பரத்திற்கு, யாம்/ அன்னியமாயில்லை. யாமே அது/ அதுவே யாம்! என்ற பரபாவனையால் மனதை அழித்து (மௌனத்தாக்கி) சாந்தனவாயாக.

(63)




(23)

மனோ ஜயமே, திடமாக கிட்டுமட்டும்,
மற்றுள்ள வியாபாரம் அனைத்தும் விட்டு,
வினைதமதாய் யாவும் ஸித்தி அது நாம் என்றே,
விருப்பமுடன் விடாது மிக சிந்தை செய்தால்,
மனோஜயமாய், மனத்தான அறிவு உதிக்கும்.
(மனோ ஜயமானால்)
மற்றதனால் ஐக மூகவாம் இருள் இறக்கும்.
(இனிய உதயம்)
இனைதயமே ஆதியிடன் இருள் எங்கேனும்,
இருப்பதனை யாரேனும் கண்டதுண்டோ?

கருத்து:— மனோஜயம் என்ற மனம் மனத்தாகும்! (மனம் அறிவாகும்) நிலை, வெறும் பரியந்தம், மனோ வியாபாரத்தை விடு என்கிறார்.

மனோவியாபாரம்:— மூர்க்கவனமும், தற்காப்பும், ஆகும் என அறிவாயாக.

(A) மூர்க்கவனம்:— எதிரில் காணும் எந்த நாமரூபத்திலும் பேதம், பேதத்தால் விருப்பு வெறுப்பு, விருப்பு வெறுப்பால் குற்றம் குறை, ஆகிய இம்மூன்றும் மூர்க்கவனம் ஆகும்.





(B) தற்காப்பு :- தேவையும், ஆசையும், பெருக்குதல்.
வார்த்தையிலும் செயலிலும் தன்மானம் கொண்டு,
வெட்கம், மானம், சூடு, சுரணை, லஜ்ஜை,
கூச்ச சுபாவம், இவைகளை விடாமல் நம் வினை என நடைபெறுவதை
ஏற்றுக் கொள்ளாமல், மறுப்பாக, சொல்லியும்,
செய்லயும், பயன்படுத்தி, தற்காத்துக் கொள்வது.

(C) ஆகாமியமாகிய, நான், எண்ணம், எனது,
விடாத் தன்மையும், தற்காப்பாகும்.
மேலே கூறிய, இம் மூன்றையும் கெடுத்து
நாசம் செய்வதே, மனோ ஜயம் ஆகும்.
இப்படி மனோ ஜயம், பெற்றவர்க்கே பர உணர்வு,
எளிதாய்க் கிட்டும். மன இருள் நாசமாகும்.
ஞானசூரியன் பிரகாசிப்பான். அப்படி பேரறிவு
உண்டாகி, ஞானசூரியன், பிரகாசித்து விட்டால்,
ஜனனமரண இருள், அகன்றுவிடும். ஜீவன்முக்தி,
அதி சுலபமாகும்.






௨௪


ஆதலினால் அமலமான மனதினாலே,
அனவரதம் பரப்பிரம்ம விசாரம் செய்து,
போதகன பரப்பிரம்மம் தானே எல்லாம்,
பூரணமாம் பரப்பிரம்மம் அது நாம் என்று,
சாதகமாம் பாவனையை திடமாய் செய்து,
சஞ்சலமாய் உள்ள மனதை நன்றாய் வென்று,
ஜோதிமிகும் பரப்பிரம்மம் தாமேயாகி,
சும்மாவே இருந்து மஹா சாந்தியாவாய்.

கருத்து:- ஆகவே மலமற்ற மனதினால், இடைவிடாமல், ஞானவிசாரணையால்! மனதை வென்று அறிவால் முன் கூறிய நிலையால், அனைத்து நாமரூபங்களும் மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என்ற சாதகமான, பாவனையை திடமாய் செய்து, சலிக்கின்ற மனதை வென்று, சாந்தனாவாய். சும்மாவே சுகமாகவே, மஹாமௌனமாயிருப்பாயாக.




அனாத அறிவான பரப்பிரம்மம் தானே,
அவித்தையினால் அசைவுறுமேல் மனதாய்
தோன்றும்.
வினவும் அறிவான பரப்பிரம்மம் தானே,
(அதே போல்) வித்தையினால் அசைவறுமேல் பரமே ஆகும்.
மனதுவும் சலனமுடன் இருக்குமாகில்,
மனதான ஜீவ பர ஜகமாய் தோன்றும்.
மனதுவே சலனமில்லாது இருக்குமாகில்,
மாசற்ற அறிவான பரமேயாகும்.

கருத்து:— எந்த பாவனையும் இல்லாத, சுத்தமான அறிவானது, (ஆத்மாவானது) மனதின் சலனக் குறைவால், (மனத்திரையால் மூடப்படும் போது) அசைவதைப் போல், தோற்றும் போது, மனதான நாம ரூப/ ஜக ஜீவ/ சொந்த பந்த, உறவு, தோற்றும். அதே மனம் அசையாமல், அறிவோடு ஒன்றாக் கலந்த நிலையில், எல்லாம் மனதாகவும், எல்லாம் நாமாகவும், நாமே அதுவாகவும்/ பரமாய் தோற்றும்.




67


26

தனது மன முயற்சியினால் பிரம்மாப்பியாசமும்,
தவிராது மனோஜயம் பெற்றோர்க்கே.
அன்னிய பர உணர்வு எளிதாய் உதிக்குமன்றே;
அன்னியர்க்கு எளிதாய் உதயாதென்றும்,
சொன்ன உணர்வு சுகம்நல்கும். துயரை தீர்க்கும்.
சுபுத்திற்கும் சுயமாக்கும் சுவயமாகும்.
ஜனன முதல் விகார மெல்லாம் தவிர்த்து தன்னை,
ஸத்திய ஸித் சுககனமாம் பரமேயாக்கும்.

கருத்து:- தனது மன முயற்சி:- இதில் ஓர் உண்மையை உணர வேண்டும். இச்ஜீவர்களின், அனைத்து கர்மாக்களும், அத்தாபம் ஏற்கும் போதே கேட்டு வாங்கிய ஒன்றாகும். அக்கர்மாக்களை, மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ, முடியாத ஒன்றாகும். ஆகவே இங்கு ஜீவமனோ முயற்சி, தேவை இல்லை யென்பதே ஸத்தியம்.




அப்படியானால், நாமரூப! ஜகஜீவ!
சொந்த,பந்த, உறவின், வாழ்க்கைக்கு
தனது மனமுயற்சி! தேவையில்லை
என்பது, பிரமாணமான உண்மையாகும்.
ஆனால்?
பக்திக்கோ! அத்வைத ஞானத்திற்கோ!
முறையாக சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்!
அவசியம் தேவையாகிறது.
இதன்காரணம் என்னவென்றால்?
அறியாமையால், செய்த வினை நாசமாக வேண்டும்
கவனக்குறைவால், உண்டான மனோமயக்கம்!
நாசமாக வேண்டும். இங்கும் இந்த மனோ
முயற்சி என்பது, முயற்சியும் அல்ல.
கடின பயிற்சியும் இல்லை. பின் இங்கு,
தனது மனமுயற்சி! என்னவென்றால்?



69

நன்றே வருகினும்! தீதே விளைகினும்! யாம்!
அறிவது ஒன்றேயும் இல்லை. என்ற நிலையிலும்.
(யும்)
நீ நன்றே செய்வாய்! பிழையே செய்வாய்!
யாமோ இதற்கு நாயகன்? என்ற நிலையிலும்.
நீயன்றி யாம் யார்? எம் நினைவு யார்? எம்
நெஞ்சகம் யார்? தாயன்றி சேயும் உண்டோ?
என்ற நிலையிலும். ஜீவகர்த்ருத்வம் முழுமையாக
அழியவும்! ஈசகர்த்ருத்வம் மேலோங்கவும்!
முழுமையாக, விடும் நிலையே சர்வார்ப்பணம் ஆகும்
இது பயிற்சியும்! முயற்சியும்! ஆகாது.
வினையும்! மனமும்! இல்லையாகவே, ஜனன மரணம்
இல்லையென்பதே ஸத்தியம்.
இப்படி சர்வார்ப்பணத்திலும். பிரம்மார்ப்
பணத்திலும். இயல்பாக பர உணர்வு!
மிக மிக, மிக மிக, எளிதாய் சாத்தியமாகும்.
(மனதை கட்டுப்படுத்துவதல்ல. மனதை எல்லாம் நீயே என விடுவதாகும்)




70

இக்கவியில், அவ்வாறு செய்யாதவர்களுக்கு, பர உணர்வு எய்தாது. நாமரூப ஜக உணர்ச்சி போகாது. அவ்வாறு செய்தவர்களுக்கு, பரவுணர்வானது சுகம் கொடுக்கும். துயரைத் தீர்க்கும். சுதந்திர சுபமாக்கும். அதி சுவபமாகும். பிறவி நோயை ஒழிக்கும். ஜீவன் முக்தியையும் கொடுக்கும். இது ஸத்தியம்.

(27)

கனவினிடை திருசியமாய் காணப்பட்ட,
குடபடமே முதலியவும் மித்தையே போல்,
நனவினிடை திருசியமாய் நாடப்பட்ட,
நாநாவாம் ஜக ஜீவ பரமும் மித்தை.
அநிய தெலிவாம் அறிகின்ற திருக்கேயான,
ஆன்மாவுக்கு அபின்னமதாம் பிரம்மம் ஒன்றே,
அனவரதம் அழியாத உண்மை வஸ்து.
(யாம்) அறைந்ததிவோர் அணுவேனும் ஐயமில்லை.






கருத்து :— கனவில் நாமரூப பொருள்கள் எம்மை தேடி வருகிறது. நனவில் நாமரூப பொருள்களை யாம் தேடிப் போகிறோம். இவ்விரண்டிலும், யாம் காண்பானே யன்றி, காணும் பொருளல்ல. அக்காணும் நாமரூப பொருள்களும், பரமாகிய (மண்ணாகிய) எமக்கு அயலாகவில்லை. ஆகவே யாமே ஸத்தியம். காணும் நாமரூபம் அனைத்தும் பொய்யே. அதுவே யாம், யாமே அது.

28


வருத்தம் இல்லாது இருக்கையிலும் வருத்தம் போல,
வழுவுற்ற மாபாவி மனதில் தோன்றும்.
விருத்தமதாம் பாவமெல்லாம் வீந்தமைத்த,
விமலமதாம் மனதுடையோர்க்கு இவ்வப்யாசம்,
கருத்திலுற மிக எளிதாம் ஆதலாவே,
தவங்காமல் எப்போதும் ஞானப்யாசம்,
திருத்தமுற செய்வோருக்கு தேவதேவன்,
திருவருளால் திடஞானம் திகழுமன்றே.

72




கருத்து:

ஆத்ம ஞான அப்யாசம், செய்ய எந்த வருத்தமும் இல்லை! என்பதே ஸத்தியம். ஆனாலும் வருத்தம் தோன்றுகிறதே என்றால்? இது கள்ளமனம் ஆகும். ஆகவே இதை மாபாவி மனம் என்கிறார். அதன் காரணம் :- ஒருவித முள் செடியையே! தின்னும் ஒட்டகமானது, வாயெல்லாம் புண் ஆனாலும், சுவையின் இனிமையிலேயே, மயங்கிய அந்த ஒட்டகமானது, அச்செடியை விடுவதில்லை. இதைப்போலவே, ஓர் மாடும் தன் முன் ஆந்தளிர் புல்! போடப்பட்டிருந் தாலும், அருந்தவிட்டு தோட்டத்தையே நோக்கும். தூரத்துப் பச்சை கண்ணுக்கு குளிர்ச்சி! என்ற நிலையில், அங்குதான் ஓடும். அதன் மாட்டுக் காரன், அதை என்ன அடி அடித்தாலும், அம்மாடு



73


அதன் பழக்க தோஷத்தை விருத்தி விடு.
காரணம் :- ஆசையின் மோஹ வெறி வேகம்!
ஆகும். அதேபோல் இந்த மனமும், ஸ்ரீபகவன்!
நாம பஜனை கீர்த்தனையும்! தமி இருப்பு ஸ்தா
னமாகிய, சுத்த அத்வைத கருத்துக்களும்!
அனுபவ சுவையின் ஆனந்தம் கொடுத்தாலும்
சாக்கடை துர்நாற்றத்திற்கு இணையான,
நாம ரூப! பொன் பொருள்! உறவு சுற்றம்! அதன்
போக்குவரவு! கொடுக்கல் வாங்கல்களின்!
வினையின் பற்று/ வரவை
விடாத மனம்! கள்ள மனமே! ஆகும்.
" மாபாவி மனமே! ".
இங்கு சர்வார்ப்பணம்! ஒன்றே!
நல்ல மனமும் ஆகும். நண்பன மனமும் ஆகும்.



நல்ல மனமும்! அதே நண்பனை மனமும்!
ஆகிவிட்டால், ஸ்ரீ ஸத் குரு தேவர்! அருளும்
பிரம்மார்ப்பணமும்! சுபமாகவும், சுலபமாகவும்,
அனுபவம் பெற முடியும். ஸ்ரீ ஸத்குரு அருளும்
வாக்கியத்தை, சிரத்தையாக, ஏற்கும் போது,
இறை கருணையும்! குரு கிருபையும்!!
அனுபவமான தன்மையால், ஸ்வய அனுபவ
திட ஞானம்! இயல்பாய் அமையும்.

29


கல்லாத கல்வியெல்லாம் கற்ற போதும்,
கலக்கம் இல்லா பரப்பிரம்ம ஞானம் ஒன்றை
அல்லாது பவபீதி விடுக்க வொண்ணா.
ஆதலினால் ஆதரவாய் நீஎப்போதும்,
எல்லாமே பிரம்மமென்றும், அது நாமென்றும்,
ஏகமதாம் பரப்பிரம்ம ஞானம் பெற்று,
பொல்லாத பவபீதி அகற்றும் போக்கில்,
பூரணமாய் உள்ள பரம் பொருளே ஆவாய்.






கருத்து:- படிப்பு, பட்டம், பதவி, அந்தஸ்து, கௌரவம், பேர், புகழ், பணம், அதிகாரம், ஆதிக்கம், ஆகிய இப்பத்தும் பாடம் ஆகும்.
(இறை குரு உணர்வோர்)
பொறுமை, பணிவு, அடக்கம், சகிப்புத்தன்மை, தீயதாத காணாமை, தீயதாககேளாமை, பேசாமை, தெய்வீக பரமார்த்தித உண்மையை மட்டும் அறிவது, இவைகளே அருந்த கற்பது, கற்றபடி நிற்பது, ஆகிய இப்பத்தும் கல்வி ஆகும்.

பா ட ம், வேண்டாம். க ல் வி, வேண்டும்.
இதைத்தான் கல்லாத கல்வி வேண்டாம் என்றும்
" கற்கும் கல்வி வேண்டும் என்றும்
சொல்லி இதில் சொல்லிய கல்வியை அற்றால், பவசாகரம் இல்லை. பயபீதி நாசமாகும்.
கற்கும் கல்வியை கற்று பொல்லாத கவலை பயத்தை, ஒழித்து பூரணப் பிரம்மமாவாய்.



கறையற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை.
(நீ) காண்பதும் கேட்பதும் எவையும் இல்லை.
நிறைவற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை.
(நீ) நினைப்பதும் நினையாதும் எவையும் இல்லை.
மறைவற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை.
மற்ற தெய்வமும் ஒருகாலும் இல்லவேஇல்லை.
குறைவற்ற பரப்பிரம்மம் நானே என்று,
கோதறவே எப்போதும் தியானம் செய்வாய்.

கருத்து:- கங்குகறையற்ற, தோற்றம் முடிவில்லாத அகண்டானந்த சமுத்திரம், ஒன்றே உண்மை. நீ உன் கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும் சம்பந்த எந்த நாம ரூபமும், உன் மனதால் எண்ணும் இல்லவே இல்லை. எதுவும் இல்லை. நாம ரூப, ஜக ஜீவர்கள் இருக்கிறோம் என்ற இருமை மட்டும், உடையதான அசைவற்ற, ஆசையற்ற எங்கும் ஓர் நிறைவாய் நின்ற பரம் ஒன்றே ஸத்தியம்.




77

(மனத்திரைக்கு மாயாஹத்திரை)
ஜீவத்திரையோ, ஈசுத்திரையோ, வேறு
இல்லாததான
எந்த திரையும்! மறைப்பில்லாத பிரம்மம்
ஒன்றே ஸத்தியம். மற்றும் காணும் அனைத்து
சராசரம்! எவையும் நாமரூபத்தோடு இல்லை.
எக்குறையுமில்லாத, பரிபூரண நிறைவான,
பிரம்மம்! ஒன்றே ஸத்தியம். அப்பிரம்மம்!
அது நாம்! என்றே சிக்கல் இல்லாமல் உணர்வாயாக.

31

ஜகமுதலாய் எண்ணுவதை தூரத் தள்ளி,
சகலமுமே பிரம்மமெனத் தியானம் செய்வாய்.
அகம் உடல் என்றெண்ணுவதை தூரத் தள்ளி,
அகம்பிரம்மம் என்றுணிசம் தியானம் செய்வாய்.
சகலமுமே பிரம்மம் என்றும், அதுநாம் என்றும்,
சந்ததமும் சலியாமல் தியானம் செய்தால்,
அகம் அன்னியம் ஜகமுதலியது அன்னியமென்னும்,
அனுதினமும்
அயலெல்லாம், அடைவாய் திரும்.

78




கருத்து :-

நாமரூப ஜக ஜீவ!
தோற்றம் அனைத்தையும்! சொந்த பந்த உறவாக!
கருதாமல், எல்லாம் மண்ணாகிய பரமேயென்றும்;
சரீரம் நாம் என்ற, உணர்ச்சியை நாசம் செய்து;
சரீரமும் மண்ணாகிய பரமே எண்ணும்; உணர்வை
பெருக்கி; எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய
நாமே! என சலியாது, தியானம் செய்தால், ஜகம்
அகம் (உலகம் வேறு நாம் வேறு) என்ற பேதம் கெடு,
எல்லாம் ஒன்றே! அது நாமே! என்ற அனுபவம் பெறுவாய்.

32

அவ்மனதின் ஓர்மை இல்லாத் தன்மையாலே;
அகம் பிரம்ம பாவனையே செய்ய சக்தி;
இவதேனும் எப்போதும் சிரத்தை யோடு;
யாம் பிரம்மம்! யாம் பிரம்மம்! யாமே எல்லாம்!




79

சலனமில்லா பரமேநாம்! பரம் நாம்! என்னும்,
சப்தத்தை உரைத்தாலும், இவ்வுறத்தால்,
நிலைமருவாத, அலைமனது! மௌனா மௌனா,
நிச்சலமாய் நிகழ்த்திய பாவனையில் நின்றோம்

கருத்து:- இப்பாடலின் அர்த்த கருத்தானது:-
பலன் கருதாது, பல ஜன்மாவில் செய்த, புண்ணிய
மானது! இச் ஜன்மாவில், தர்மமாக மாறிய
வர்களுக்கு மட்டும்! அது சாத்தியமாகும். அப்படி
மாறாதவர்களுக்கு, இது சாத்தியமாகாது.
தற்சமயம் நடைபெறும் காலம்:-
வக்ர குண மனமும்! கடின வினையும்!
விதியின் வழியே மதி செல்லும்! என்ற கலியின்
ஜீவ ஆதார கட்டளையும்! இணைந்துவிட்டால்,
ஸ்ரீபகவான் நம்பிக்கை! இல்லாதவர்களுக்கு,
ஆத்மஞான! ஜீவன் முக்தி! இல்லையென்றே சொல்லலாம்.


80



உங்கள் ஸ்ரீகுரு தேவர்! கிருபையோடு அருளும்:—
(1) கருவி கரண ஒழுக்கம்.
(2) ஓர் நாம ரூப ஸ்ரீபகவானிடம் சர்வார்ப்பணம்.
(3) ஸ்ரீ ஸத்குரு வாக்காதிய பிரம்மார்ப்பணம்.
ஆகிய இம் மூன்றும்! இணைந்தால் மட்டுமே!
ஜீவன் முக்தி! இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!

இனி இப்பாடலின் கருத்து.


ஆசையே மனம். மனமே சலனம்! சலனமே
சஞ்சலம்! சஞ்சலமே! சந்தேக கலக்க பயம்!
என உணர வேண்டும்.
அப்படி சர்வ சதா சலிக்கின்ற மனம்! அந்த ஆசையை
நிறுத்த. பிரம்மம் ஸத்தியம்! ஜகத் மித்தை!
என்ற வேதாந்த வாக்குப்படி — அகம் பிரம்மம்,
ஜகம் பிரம்மம், அகமே எல்லாம். என்றும்
ஆகவே ஜகம் பரமும் ஜீவர்களும் (நாம ரூபமாக) அவரவரே இன்றி!
என்ற நிலையில் எந்த விஷயமும் தைவதாரை போல்
அந்த ஒன்றாக இருக்கிறார்கள் என்றும்



(81)

யாம் பிரம்மம்! யாம் பிரம்மம்! சுவாமி இவ்வாறு
பரமே யாம்! என்ற, இந்த, ஸத்திய வாக்கு!
ஸப்தித்து சொன்னாலும்; இந்த தர்மத்தால்!
அசைந்தசைந்து, சஞ்சலப்படும் மனமானது;
மெள்ள மெள்ள! மெள்ள மெள்ள! மெள்ள மெள்ள!
அசையாமல், உன் பிரம்மானந்த பாவனையால்!
நிலைத்து நிற்கும். இது ஸத்தியம்.

அது எப்படி என்றால்? பிரம்மம் ஸத்தியம்!
ஜகம் மித்தை! என்பதே ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!
இதன் உண்மை என்னவென்றால்?
முழுமையாகவே இவ்வாறு நாமரூப!
ஜக ஜீவ! உறவு சுற்ற! அனைத்து உலக தோற்றங்களும்,
இவைகளை, உண்டு பண்ணினோம்! எனக் கூறும்.
மாயாவும்! (திரி கர்த்தாக்களும்.)
சிப்பியில் தோன்றிய வெள்ளியேயாகும்.




32

அதாவது? (பரதர்ம விளக்கம் அடுத்த பக்கம் தொடர்கிறது)


மண்ணில் (பரத்தில்) தோன்றிய மண் (பரத்தன்)
பதுமைகளும் அதன் (மாயா) மனம்
விளையாட்டும் ஆகும். இதுவே ஸத்தியமாகும்.
இதை சபலம்! சலனம்! சந்தேகம்! கலக்கபயம்!
முழுமையாக நாசம் செய்த, பக்குவ
ஆன்மாக்களுக்கே சாத்தியமாகும்.
ஏனையோருக்கு சாத்தியமாகாது. இது ஸத்தியம்.

33 இப்பாடலின் கருத்து 85 பக்கத்தில் காண்க.


நிரந்தரமாய் பாவனையில் மனது நின்றால்,
நிச்சலமாய் அகண்டபர ஞானம் உண்டாய்,
திரிந்தலையும் மனதினுடைய விகல்பமாக
தெரிகின்ற பேதமெல்லாம் உடனே தீரும்.
தெரிந்திடும் இப்பேதமெல்லாம் தீரும்மட்டும்
திருஷ்யமாய் தெரிவதெல்லாம் பரமே என்றும்,
(அப்படி) யொருத்திய அப்பரப்பிரம்மம் நாமே என்றும்,
பூரணமாய் எப்போதும் தியானம் செய்வாய்.



இந்த தர்மத்தால்!
வாக்கு தர்மமாக மாறும் நிலை:— வாக்கிலே தான்!
அந்த காலாதீத பரத்திற்கு, விளக்கம் கொடுக்க
முடியும். அந்நிலையில் வாக்கு ஸத்யம்!
ஸத் = உண்மை! யம் = இருக்கிறது. உண்மை!
உண்மையாகவே! இருக்கிறது.
ஞானப்பிரகாசிக்கிறது. லௌகீகம்! வைதீகம்!
பரமார்த்திகம்! ஆகிய, இம் மூன்றின் விளக்கமே,
வாக்கால் தான்! நடைபெறுகிறது. தெய்வீக நிலையில்
ஸத்திய தர்மம்! என சொல்லுவார்கள். ஆதலால்
பரமார்த்திகத்திற்கு! எந்த தர்மமும்! இல்லை தான்.
ஆனால் ?
பரமார்த்திக நிலையிலுள்ள, காலாதீத பரமாகிய,
பரப்பிரம்மத்தை! இப்படி இருக்கலாம்
என்றோ என்றோ இப்படி இருக்கிறது!
சுட்டிக் காட்டும் நிலைக்காத அதனை! அம்மானை
ஆதி ஸ்ரீ வேதாந்திமார்கள்!




யோகமாயாவின் துணையுடன்! அதாவது
பிராண(ஓ)வம் என்ற பரஒலியை!
கிரஹித்துக்கொண்டு, அம்பர ஒலியே! வாக்காக!
ஆக்கிக்கொண்டு, ப ர அ னு மா ண நிலையில்,
(பர இருப்பை)
பராஸ்சக்தியாக! வி ள க் கி ன் ற ர் க ள்.
இதை அப்போது பரதர்மமென்று! உபசாரமாக சொல்வர்.
இந்த உ ப சா ர! ப ர த ர் ம த் தா ல்! தான்,
பரத்தின்! இ ரு ப் பை யு ம்!
ஈசனின்! தோற்ற! இ ரு ப் பை யு ம்!
(நிலைகள் தோற்றங்கள்)
ஜக/ஜீவ! தோற்ற! இருப்பின்! இயக்கத்தையும்!
பிர(ஓம்)ணவ பர ஒலியின்! (வாக்கு வழியில்)
உணரலாம். அதை உணர்த்துவாம்! என்று, ஆதி
ஸ்ரீமஹான்கள்! வாயிலாக அறிகிறோம். — ஸ்வயம் பரம்



85

கருத்து:- முன்பாடலை ஒட்டியே இப்பாடலும் அமைந்திருக்கிறது. "அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம், அகமே எல்லாம்! "ஜகம்பரமும் ஜீவர்களும் ஒன்றேயும் இவ்வி!" என்ற இந்த, அகண்டபரபாவனையை! அகண்டான்ம பாவனையை! சகஜான்மபாவனையை! நாமரூபஜகஜீவ! ஈஸ்வராதிகளை, மண்ணில் தோன்றிய, பொன்னும் ஆபரணமும்! என நிச்சயமாய், உணர்ந்த நிலையில், நாமரூபம் கெட்டு, மண்என உறுதிப்பட்டு, அகண்ட சாஸ்வத ஞானம் பெறும்போது, அனைத்து நின்ற உணர்வான, பேதங்களும் நசித்து அழியும். அனைத்து நின்ற உணர்வான பேதங்கள்! அழியும் வரை, உன் அனுபவம் எப்படி இருக்க வேண்டும் என்றால் கண்ணால் காணக்கூடிய, அனைத்து நாமரூபங்களும், பரமாகிய மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நானே! என்றும் அனைத்து ஓசைகளையும்! அனைத்து வார்த்தைகளையும் பரஅம்ஸ ஓம்காரமே! ஓம்காரபரஅம்ஸமே! அது நானே! என்று பரிபூரணத்யானம் செய்வாயாக.




௮௬

34

நிறைவுறும் இந்நிஷ்டையுள்ளோர் நீசரேனும்,
நிர்மலமாம் பரமாகி முக்தராவர்.
அறைவதிவோர் அனுபவேனும் ஐயமில்லை.
உறுதியிதே! ஆதலினால் முயற்சிசெய்வாம்;
குறைவறவே இந்நிஷ்டை கூடுமட்டும்,
கூறுபடும் பேதமெல்லாம் பிரம்மமென்றும்,
அறிவுருவாம்! அப்பிரம்மம் நாமேயென்றும்,
அகண்ட பரபாவனையே பழகவேண்டும்.

கருத்து:— பரிபூரணமான! இந்த ஆன்மநிஷ்டையை நீசன்! சண்டாளன்! மகாபாவி! ஆகிய எவரானாலும்! பெறமுடியும். காரணம்:— புண்ணிய பாப! கர்மாதாவும் நாமும் அல்ல. நமதும் அல்ல. அவை மாயாவும்! மனதும்! செய்யும் ஓர் விளையாட்டு என உணரவும். உன் சர்வான்ம பாவனையால்! எல்லோரும் நல்லவரே! எல்லோரும் நம்மவரே! என்பது ஸத்திய ஸாஸ்வதம் ஆகிவிட்டால், நாமரூப பாண்டமும் இல்லை. நாமரூப ஆவரணமும் இல்லை. களிமண்ணும் இல்லை. பொன்னும் இல்லை. இரும்பது மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே!




ஓர் நிலையில் (87)
சொல்வது
என்றால்? நேயன்,
நேர்! நேசன்! என்ற
மூன்றின் அம்சமே
முறையே பிரம்மன்!
நாராயணன்! இப்
பெருமான் எனத்தோற்
றம் எடுத்த நிலையில்
அம்சங்களே, அதிஷ்டானம் (சிவம்) ஆகும்
மற்றும் மாயா! காரணங்கள் நான்கு!


(35)

மாயை இல்லை, மருவும் அஹங்காரம் இல்லை,
மனமும் இல்லை, புத்தி இல்லை, சித்தம் இல்லை,
காயம் இல்லை, கருமம் இல்லை, கர்த்தா இல்லை,
காண்கின்ற பொறிகள் இல்லை புலன்கள் இல்லை,
ஆயபல உயிர்கள் இல்லை, அமரர் இல்லை,
நேயனும் இல்லை, நேர்யும் இல்லை, நேசனும் இல்லை,
நேய பொருள்! எதையும் இல்லை, எல்லாம் என்றும்,
ஏகபரிபூரணமாம் பிரம்ம ரூபம்.

கருத்து: (1) மாயை இல்லாமையினால் எந்த தோற்றமும்! எதுவும்! எவரும்! இல்லை. மண்ணாகிய பரமே இருக்கிறது. (2) மனம் இல்லாமையினால் எந்த நாமரூப/பதுமைகளும் இல்லை. மண்ணாகிய பரமே இருக்கிறது. (3) புத்தி இல்லாமையினால், எந்த நாமரூப வர்ணனைகளும் இல்லை. மண்ணாகிய பரமே இருக்கிறது. (4) சித்தம் இல்லாமையினால், இதுதான் என்று உறுதிப்படுத்தும், எந்த நாமரூபமும் இல்லை மண்ணாகிய பரமே இருக்கிறது. (5) அஹங்காரம் இல்லாமையினால் உடைமை உரிமையாக்குவதும் எந்த நாமரூபமும் இல்லை (6) காயம் (உடல்) இல்லாமையினால் என்றும் அங்கு மண்ணாகிய பரமே இருக்கிறது.



பொறிபுலன்கள்
5 + 5 = 10 (88)
(பந்தம்)
அனைத்து ஜீவ
கோடிகளும்
33 கோடி தேவ
தெய்வ இருப்பும்!
அனைத்து நாமரூப தோற்
றங்களும்! அதிஷ்டானத்தில் தோன்றிய
மண்பதுமையாக ஆடியது. (இங்கு நாமரூபம் உண்டு)
அதுவே மண்மயமான பரமே ஆனது. (7) கருமம்
இல்லாமையினால் நாமரூப உடலும் அதன் இயக்கமும்
இல்லாமல் மண்மயமான பரமே ஆனது. (கர்மா கர்த்த)
(8) (ஜீவ) கர்த்ருத்வம் இல்லாமையினால், வினை
சம்பந்தம் இல்லாமல் மண்மயமான பரமே ஆனது.
(9) பொறிபுலன்கள் (ஞானேந்திரியம் ஐந்து!
கர்மேந்திரியம் ஐந்து!) இல்லாமையினால்,
மன இயக்கம் அழிந்த நிலையில், மண்மயமான பரமே
ஆனது. (10) ஆயபல உயிர்கள் (84 லட்சம் ஜீவ
கோடிகளும்) இல்லாமையினால், அனைத்து மண்
பதுமைகளும், மண்மயமான பரமே ஆனது.
(11) அமரர் (33 கோடி தேவர்களும்) இல்லாமை
யினால், தேவ தெய்வ இயக்கங்களும், மாயாவில்
மயமாகி, பரத்தோடு கலந்து விட்டது.
(12) ஹயன்! ஹரி! ஹரன்! என்ற மூன்று மூர்த்திகளும்!
இருக்கிறோம் என்ற, இருப்புத் தன்மை
மறைந்து போனதால், அம்மூன்றும் முறையே




ஆரோபம் ஆகும் (89)
இங்கு ஜடமும்
அதிஷ்டானமும்
செயற்கு புறம்
என்ற மண்ணும்
போது; ஆரோபம்
அனைத்தும் இறையின்
வெளியென நாச
மாகும் என உணர வேண்டும்.
அதிஷ்டானம்! நிஜம்! ஆரோபம் அதன் வெளி!
அதிஷ்டானமும் இல்லை. ஆரோபமும் இல்லை. ஆதல் ஒன்றுமின்று.

பிரம்மன்! நாராயணன்! சிவபெருமான்! என்ற
இயக்க நிலையை விட்டு. அவர்கள் மாயாவையும்
நம்முள் ஈர்த்துக் கொண்டு, அந்த நாம ரூபமும்!
நாசமான நிலையில், வாக்கிய விளக்க நிலையில்,
மட்டும். ஸ்ரீ வத்ஸ குருவாகவும்; பர குருவாகவும்
நம் வசப்படுத்தில், மண்மய பர சொரூபமாகவே
இருக்கிறார்கள் எவ்வாறே பரமே! என்றும். பரமாகிய
நாமே என்றும்; அகண்ட பரமாவதே செய்வாயாக.

35 வது பாடலின் மற்றோர் விளக்கம்:-

இந்த இரண்டாம் முறை, ஸ்ரீ பத்திரி சென்ற சமயம். ஓர்
குகையில்! அநேக அன்பர்கள் கூடி இருக்க, அவர்கள்
அனைவர் சார்பிலும், ஓர் ஸ்ரீமஹாத்மாஜீ கேட்டதாவது:-
ஸ்ரீமஹாத்மா! ஆமாம் பாபாஜி! ஸ்வய நான அனுபவ
நாவில்! முப்பத்தி ஐந்தாவது பாடலில் வரும்;
ஹயனும் இல்லை! ஹரியும் இல்லை! ஹரனும் இல்லை!
வரியை நான் கருதும் மற்றும்
என்ற ஆறவது!



அந்த (ஓ)
என்பது எதைக்
குறிக்கிறது என்றால்
அமிர்தம் திருத்தம்
ஆகவும் ஸத்ய
பிரமாணமாகவும்
உண்டு அல்லது இல்லை என்ற நிலையில்
எல்லா அன்பர்களும் அப்படியே சொல்கிறோம்.
ஆனால் தாங்கள் மட்டும் அந்த என்ற ஓர்
வரியையும் சேர்த்து அமிர்தமாக
சொல்கிறீர்கள்.
ஆனால் அந்த வரியை, மற்றும் எவரும் சொல்வ
தாங்கள் அனுமதிப்பதில்லை. இதன் காரணம்
அந்த அபசார வாக்கு உங்களுக்கு வேண்டாம்
என்று கூறி விடுகிறீர்கள். இந்த வரி உங்களுக்கு
அபசாரம் இல்லையா? அப்படியானால் எங்கள்
கேள்வி என்னவென்றால்:— எங்கள் அனைவரையும்
வேண்டாம் என்று, மறுக்கும் காரணம் என்ன?
தாங்கள் மட்டும் சொல்லும் சக்தி
நிலை என்ன? தாங்கள் எந்த நிலையில்
இருந்து கொண்டு, அவ்வாறு சொல்கிறீர்கள்?
இதை சற்று விளக்கினால் போதும்பாபா ?????



உருகியிருந்தும்

வாக்கியமாகும்.

அந்த! அது! (91)

அவன்! அவள்! இவை

போன்ற வாக்கியங்கள்

சுட்டிக்காட்டும் நாவியல் சிந்தை கவிதை

பயன்பாடு சொல்லும் உருவகமொழியாகும்.

வைத்தியம் :- இது நல்ல பயனுள்ள கேள்வியே.

இது எல்லோருடைய உள்ளங்களிலும் உள்ளது.

ஆனால் அது கேள்வியாக இதுவரை அறிவிப்பில்

↑ இன்று வந்து விட்டது! விளக்கம் காண்க.

சற்று கடினமான வாசகம் வரும். ஆகவே இந்த

நடையை மன்னிக்க வேண்டுகின்றேன், உங்கள்

அனைவர் திருவடிகளையும், சாஷ்டாங்க நமஸ்காரம்

செய்து, முதற்கண் மன்னிக்கக் கோருகிறேன்.

விளக்கம்.

அந்த **நிலையை** நீங்கள் பெற்று விட்டால்,

அவசியம் நீங்களும் அந்த என்ற வாக்கை உபயோகிக்கலாம்

உன்னை பெற்றெடுத்த பரிமாகா பரிமளா! **மனோ**!

நிறைவுற்றிய உன் ஆசை மனைவியும்! „ !

„ „ „ „ அருமை கணையாழியும்! „ !

நீங்கள் ஆசையாக, உங்கள் **குழந்தை**! „ !

வாரிசாக, பெற்றெடுத்த

உங்கள் உறவு, சுற்றம்! தரும்

நட்பு, மற்றும் இனம், ஜனம், பந்துக்கள் „ !

எல்லாம்



தெய்வங்களுக்கு
தனித்த ஒரு
நிலையில்,
ஏந்த நாம ரூபமும்
இல்லாமல். அவை
மோன நிலையில்
இருந்து கொண்டு இல்லை
என்றால் அபசாரம் ஆகும்
அறிவு நிலையில் உணர்ந்து சொன்னால்
அது உபசாரம் ஆகும்.

உன் அனுபவ நிலையில் உள்ள
பணம்! பொன்! பொருள்! போகம்!
மற்றும் எல்லா வஸ்துக்களும் மண்ணே!

தாவர வர்க்கங்கள் எல்லாமும் ,, !


மனித இனம் உட்பட, நடப்பன!
பறப்பன! நீந்துவன! ஊர்வன!
கிருமி கீடங்கள் எல்லாம் ,, !

அனந்த கோடானு கோடி சூர்ய
சந்திரர்களும்! கோடானு கோடி
கோள்களும்! எல்லாம் ,, !

ஆக மொத்தத்தில் எல்லாம் ,, !

மண்ணுக்கு அன்னியமாய்,
எவரும்! எதுவும்! இல்லை என்பதே சத்தியம். எனையும்

எல்லாம் மண்ணே! மண்ணே எல்லாம்! எல்லாம் பரமே!
பரமே எல்லாம்! எல்லாம் நாமே! நாமே எல்லாம்!
இந்த அனுபவம்! ஸ்வயமாகவும்! ஸகஜமா
கவும்! சுகசுலபமாகவும்!
பெற்றிட்டால்!



தோற்றக்கிற்கும் (93)
இருப்புக்கும்
மாயா! ஆதாரம்
இயக்கக்கிற்கும்
இயக்க குணங்களுக்கும்
மனம்! ஆதாரம்! ஆதாரவு! ஆகாரம்! ஆகும்.

(1) இல்லாததை, இருப்புடையதாக காட்டி மயக்கும் மாயா! எது?

(2) அம்மாயாவை (ஏற்று) மருவி! அதாவது உரிமை & உடைமையால் தோன்றும் அதிகார ஆதிக்கத்தின் அஹங்காரம்! எது?


(3) மேலே கூறிய இந்த, அதிகார ஆதிக்க! அஹங்காரத்தின் மனம்! தான் எது?

(4) அம்மனத்தின், காரியத்தின் (யின்) விதவித! வி ரே த! புத்தி! தான் எது?

(5) அதை நிகரக & விசுவித (நிச்சய) கர்மியின் புத்தியின் மறுவடிவ சித்தம்! தான் எது?

(6) மனம்! புத்தி! சித்தம்! ஆகிய இம் மூன்றும் இல்லாமையால் புண்ணியபாப உடல்களாகிய காயம் (உடல்) தான் எது?

(7) புண்ணிய பாப சேர்க்கை இல்லாத தன்மையால் கர்மா தான் எது?



ஒரு மனிதனுக்கு அவன் மனதின் அஹங்கார (94) அதிகார! ஆதிக்கமே ஜீவ கர்த்ருத்வ திருப்பாவம் அவன் அறிவாகவே

ஆகிவிட்டபடியால், மனதின் இச்சைகள்! வந்தேனோ! இருந்தேனோ! மறைந்தேனோ! பயம் இல்லாமல் மறைந்து ஆனந்தம் என்றே ஸ்வயமாகும்.

(8) புண்ணியபாப கர்மா இல்லையாதலால், ஜீவகர்த்ருத்வம் என்ற **கர்த்தா!** தான் எது?

(9) ஜீவ கர்த்ருத்வம் என்ற கர்த்தா! இல்லையாதலால், கர்மேந்திரியம்! என்னும் கர்மேந்திரியம் **பொறிகள்!** தான் எது?

கை! கால்! மலஜலத்துவாரம்! வாக்கு ஆகிய இந்த ஐந்தும்

(10) ஞானேந்திரியம் :- கண்! காது! மூக்கு! வாய்! ஸ்பரிசஉணர்வு! இவை ஐந்தின் இல்லையால் **புலன்கள்!** தான் எது?

(11) ஒட்டு மொத்தமாக 84 லட்சம் ஜீவ கோடிகளின் உயிர்களின் **சரீரங்கள்!** தான் எது?

(12) மேலே சொன்ன, இவைகள் அனைத்தும் இல்லையாதலால் இவைகளை வைத்து ஆளுகின்றேன் என்றும் **33** கோடி **தேவர்கள்!** கூட்டமும் அவர்கள் தேவலோகமும் தான் எது?



நாணும் நிதியில்
நாம ரூபம் ஒரு
அனைத்தும் பதுமை
கனாக தோற்றி
விட்டால் உன்மனம்

# அறிவாக!

மாறி விட்டு அதனை சத்தியமாக நம்புவாயாக.

# ஜீவ! தேவ!

கூட்டமும்! அவர்கள் உலகமும்
அவர்கள் இருப்பின் இயக்கமும்! இல்லையாயின்.

(**நாமரூப, ஜக, ஜீவ,** எந்த தோற்றமும் இல்லையாயின்)

# ஈசு!

ஸ்ரீபிரம்மதேவன்! ஸ்ரீமந்நாராயணன்! ஸ்ரீசிவபெருமான்!
என்ற திரிகர்த்தாக்கள் தான் **ஏது?**

மேலே கூறிய இம்மூவரும், இல்லையாயின் இவர்கள் அம்சமாக
(இவர்களின் மூவர்களான ஸ்ரீஅயன்! ஸ்ரீஅரி! ஸ்ரீஅரன்!)
என்ற தோற்றம் இல்லாத (சிற்பம் ஆகாத வெறும்

# பாறைகளாய்)

இருப்பும் ஓர் தோற்றமும்
உடையது, எனச் சொல்ல ஒன்றுமே இல்லை!

# அகண்ட பரிபூரணமானதே

அன்றும்! இன்றும்! என்றென்றும்! உள்ளது.




உணரும் நிலையில் அழைத்து (96)
நாமரூபமும் மறைந்து!
உணரும் நிலை பெற்று விட்டால் (பதுமைகள் தோன்றிடினும் அவை மண்ணே (என உணர்ந்தால்)
பேரறிவு பிரகாசிக்கிறது என, சத்தியமாக நம்புவாயாக. அதுவே முடிவு.

# அதுவே நாம்! நாமே அது!!

என்ற **பேரறிவின்!** வடிவமாகி விட்டால்
நீங்களும் அம் ஐக்கியம்! போன்று அப்பாடல் பாடும் போது
ஸ்ரீ ஹயன்! ஸ்ரீ ஹரி!
ஸ்ரீ ஹரன்! இவ்வி எனச் சொல்லும் முன்பு!

# அ...............ந்...............து!

என்ற வார்த்தையை மோடவாய் என்று **ஆகி!**
ஸ்ரீமஹான்களின் சத்திய வாக்காக நம்புக.
சந்தேகமே! சந்தேகத்தால் கலங்கமே! கலங்கத்தால் கலக்கமே! கலக்கத்தால் **மரணபயமும்!**
அறவே தோற்றுமல், ஆனந்தம் ஒன்றே தோற்றுமாயின்
**ஜீவன்முக்தி!** பெற்று விட்டீர்கள் என, சத்திய பிரமாணமாக, அறிவுறுத்துகிறோம்.



உன் உடலும் (97)
மற்றும் எல்லாம்
நாமரூபமாக
தோற்றுவதை!
ஸ்ரீபகவானுக்கே
நாமரூபம்
கொடுக்க வேண்டும்.
உன் உடலும் உடைமையும்

மனை! என அர்ப்பணிக்க பயமின்றி, உணர்ந்து விட்டால் ஸ்ரீபகவானின் நாமரூபமே இவ்வுலகு அன்றே அந்த பகவானிடத்தில் எனச் சொல்லலாம்.

இப்பாடலின் உட்கருத்து.

நீ! பரசொரூபமே! ஆனாலும்,

மனம் வசம் அகப்பட்டு, மனத்திரை! உன்னை மூடியிருப்பதால் நாமரூப உலகமே! உன் மனக்கண் முன், சத்தியமாக தோன்றுகிறது.

ஆகவே உன் அம்ச பரசொரூபமே! நாமரூப (ஸ்ரீபகவானும்) அம்சம் கொண்டால் தான்! அந்த நாமரூப! ஜக ஜீவ! சிருஷ்டி உண்டு.

நீயே! நாமரூபமாக இருந்து கொண்டு, உன் அம்ச பரத்தை நாமரூப ஸ்ரீபகவானை! இல்லையென்பது, அபசாரம் ஆகும்.

நீ! நாமரூப! ஜக ஜீவ! அனைத்தையும் தோற்றுவிக்கிறாய், மனதை! உணர்ந்து விட்டால், உன் அம்ச பரசொரூபத்தையும் நாமரூபம்! ஒன்றென்றும் அ நந்த நாயன்! ஹரி! ஹரன்! இவையென்றும் சொல்லலாம்.




98

உன் கவனக் குறைவின் நாமரூபத்தையும்! ஜக ஜீவ நாமரூபத்தையும் நாசம் செய்யாமல், ஸ்ரீ நாயன்! ஸ்ரீ ஹரி! ஸ்ரீ ஹரன்!

நாமரூபத்தையும் இல்லையென சொல்வதே.

நாமரூப! ஜக ஜீவ! தோற்றத்தை உண்டுபண்ணிய மனம்! ஏதேனும், ஓர் எதிர்பார்ப்புடன் தான் செயல்படும். எதிர்பார்ப்பு இல்லையானால், அமைதி ஆகிவிடும். இந்த மனம் இயல்பாகவே, எதிர்பார்ப்பினால் நாமரூப ஜகம்! தோற்றம்! இருப்பு! மற்றும்/ மறைவுடன் கூடியதாகவே நடப்பதையும்! கிடைப்பதையும் மாற்றத்தில் பெரிய மாற்றம்! உண்டாகி, அதைவிட அதிர்வான ஓர் தடுமாற்றத்திற்கு ஆளாகிறது. இந்த மனதின், வீழ்ச்சிக்கு குணதோஷமே காரணமாகும்.


இந்த மனமாறுதலின் ஓர் மித்த சர்வார்ப்பணத்தால்! அறிவே நாமம்! என ஆகிவிட்டால், நாமரூபம்! சக்தியும்! புதுமைகளாகவும்! மின் அனுபவத்தால், மனம் அடங்கியும்! இயல்பாக மாறிவிடும். இதில் பெற்றுவிட்டால், அந்த நாயனும் இல்லை! ஹரியும் இல்லை! ஹரனும் இல்லை! என சொல்லும் நீயும் இல்லை! அவதாரம் இல்லாமல் உபதாரம் ஆகிவிடும் இது சத்தியம்.




(96) அன்னியமே தோன்றாத அகண்டாகார
அறிவுதனை அடைந்தவனே முக்தனாவான்.
இந்தவிதம் அகண்டபர ஞானமுற்றோன்.
இவ்வுலகில் எவ்விடத்தும் அரியவனாவான்.
(அவன்) சொல்லவொண்ணா பலகோடி ஜீவருக்குள்,
உரமான ஞானமுள்ளோன் ஒருவன்தானே.
அன்னவனைத் தரிசித்த மாத்திரத்தில்,
அறம் மேவோங்கும். அஹம் எல்லாம்
அழியுமன்றே!


கருத்து :— 96வது பாடலில் குறிப்பிட்டபடி,
நாமரூப சம்பந்தம் கொண்ட ஜீவகர்த்ருத்வமும்!
மாயா சம்பந்தம் கொண்ட ஈசகர்த்ருத்வமும்!

முழுமையாக அழிந்து, நமக்கு அன்னியமாய் எவரும்
எதுவும் இல்லையென்ற, அகண்டபர உணர்வை
பெற்றவன் எவனோ, அவனே! ஜீவன் முக்தன்.



100

அப்படிப்பட்ட திட ஆத்ம ஞானியை, திரிலோகத்
திலும் காண்பது, அரிதினும் அரிதாகும்.
காரணம் :- அவன் தன்னை, தான் இன்றன்
என, காட்டிக் கொள்ளமாட்டான். காட்டிக்
கொள்ள இயலாது. அதன் காரணம்,
இருப்பே இல்லாத, அதன் அம்சம்
கொண்டதால், அவனும் இருப்பு இல்லாதவ
னே.
ஆகவே தம்மை காட்டிக் கொள்ள முடியாது. தன்னை
காட்டிக் கொள்ள இயலாது. (மன்னிக்கவும்)
பூர்வ புண்ணியம், தர்மமாக மாறியவர்களும்;
கடந்த ஜன்மாவிலோ, இச் ஜன்மாவிலோ,
ஸ்ரீ பகவானுடைய, பரம கிருபையை பெற்றவர்களு
ம் அவனை காணவும், பின் உணரவும், முடியுமென
ஆதி ஸ்ரீமஹான்களின் வாயிலாக அறிகிறோம்.
(இனியோர் அவரவர் மனநிலைக்கு ஏற்ற வாறு காண்பர்)



அவன் தரிசித்த மாத்திரத்தில்;

அறம் மேலோங்கும்! அஹம் அழியும்!

இதன் பொருள் :- பக்தி / யில் பக்குவப்

(உலராத)

படாத உள்ளம்; ஞானத்தால் /

எரிக்க முடியாதது என்பது, ஆதி ஸ்ரீ மஹான்களின் /

ஸ்வ ய அ னு ப வ / வாக்காகும்

(அந்த)

மேலே சொன்ன, பக்தி நிலையில் முன் & பின்


(A) ஜென்ம சுகிர்தமானது / தர்மமாக மாறும்.

(B) அந்த விதையே / அஹம் அ ழி யு ம்.

(A) காய் நிலையாகும். (B) கனி நிலையாகும்

அவன் திருஷ்டியினால் பெறுவதே, சு வை ஆகும்.


குறிப்பு:- தரிசித்த மாத்திரம் (அந்த விதையே) என்பது, மனம்! அறிவான / நிலையையே குறிப்பிடுகிறார்.




37


பேசிய அந்த நிச்சயமும் சமாதி விட்டு;
பிரிவுற்ற காலத்தில் உள்ளதன்றி;
பாசமில்லா சமாதிதன்னில் இருக்கும் காலை.
பரவிய அந்த நிச்சயமும் அறிஞர்க்கில்லை.
சாசுவத சமாதிதனில் சலனமற்று,
ஸங்கல்ப விகல்பங்கள் அனைத்தும் அற்று,
ஆகில் பரம ஆனந்த அனுபவத்தோடு,
ஆவரணம் இன்றி அசஞ்சலமாய் நிற்பன்.

கருத்து :- முன் 36வது பாடலில் கூறியிட்டபடி,
வாய் ஞானம் இல்லாமல், அனுபவ ஞானம் கூடினால்,
அந்த சாதகனுக்கு, சமாதிநிஷ்டை இயல்பாகவும்,
சாஸ்வதமாகவும், சுபமாகவும், அதி சுலபமாகவும்,
அமைந்து விடும். அவனிடம் பாசம் இராது.
இறை அன்பும்! ஞான அறிவும்! ஸ்திரமாக
இருக்கும். நாம் இந்த விதமாக நிஷ்டை கூடி
இருக்கிறோம், என்ற எண்ணமும் இராது.



102A


அந்த எண்ணமற்ற தன்மையினுள் நாம ரூப
ஆவரண மயக்கமும், அதனுள் ஏற்படும்
குணதோஷ கலக்கமும், இல்லாமல் பட்ட
கட்டை போலும், கருங்கல்லைப் போலும்,
அசைவற்றிருப்பான்.



38

சலனமில்லா சிலை போலும்; காஷ்டம் போலும்;
ஸங்கல்ப விகல்பங்கள் ஒன்றும் இன்றி;
கலனமுறுப் பிரம்மத்தில் பாலும் நீரும்;
கலப்பது போல் வேறறவே கலந்து சற்றும்;
அலவறவே வெறிதாக சுகித்திருக்கும்;
அறிஞனுடைய அந்நிஷ்டை மஹிமை தன்னை;
நிலமருவா மனத்தாலும்; வசனத்தாலும்;
நினைத்திடவும்! பகர்ந்திடவும்! யார்தான் வல்லோர்?


கருத்து:— நாமரூப! பேதா பேதத்தால்! ராகத்துவேஷமும்! ராகத்துவேஷத்தால்! ஸங்கல்ப விகல்பமும்! (பேத திருஷ்டியினால் விருப்பமும் வெறுப்பும்! அவ்விருப்பு வெறுப்பால் குற்ற தோஷ கற்பனையும்) உண்டாவது, மனதின் இயல்பான சுபாவமாகும். இம்மனதை,



சர்வார்ப்பணத்தால் மேலே கூறிய மூன்றின்
எழுச்சி நிலைகளையும், நாசம் செய்து, காணும்
உலகை, குற்றமற்றதாக, ஆக்க வேண்டும்.
அந்நிலையே பாலும், நீரும், ஒன்றாக கலந்த
நிலையாகும். எவ்வாறு

குறிப்பு:- பாலானது, ஜலத்தை தன்னுள் அடக்கி,
ஜலத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்
கிறதோ, அவ்வாறே ஓர் முமுட்சுவானவன்,
நாமரூப ஜகத் ஜீவ, தோற்றத்தை வெளியில்
கண்டு கொள்ளாமலும், கண்டிக்காமலும்,
பால்போன்று, தாய்மையாக தம்முள் அடக்கிக்
கொள்வான்.


மேலே கூறிய நிலையில், ஒன்றாக கலந்த நிலையில்
அலையற்ற சமுத்திரம் போல், சாதனையையும்,
தம்முள் அடக்கிக் கொண்டு, பிரம்மானந்த
மயமாக தான் தானாகி, இருக்கும் அந்த சகஜ
ஞானியினுடைய, பெருமையை வாக்காலும்,
வரியாலும், எவரும் சொல்ல முடியாது.



39

பலகால வாதனையால் துவைதம் தானே,
பரமார்த்தம் என்று நினைவு உதித்த போதும்,
தொலையாத துவைத வடிவாகத் தானே (தோற்றும்)
துவைதத்தை நினையாமல் அவற்றை எல்லாம்,
அலையாத அதிஷ்டான அறிவாய் நின்று,
அத்வைதம் ஆன பர வடிவே யாகச்,
சலியாமல் எப்போதும் நினைத்தே அதனால்,
ஸத்திய ஸித் சுகவடிவாய் முக்தனாவாய்.


கருத்து :- நாமரூப ஜகத்தில், பல காலமாக, பழகிய பழக்க, வழக்கத், தோஷத்தினால், அவ்வாஸனையின் பலத்தால், அத்வைத, எண்ணம் பலமாக, இருந்தாலும், பெருங்காய டப்பாவின், வாஸனையைப் போல, துவைத, எண்ணம், மாறி மாறி, மாறிமாறி, மாறிமாறி, வந்தே தீரும். அங்கு அந்த முமுக்ஷுவானவன், சலிப்படையாமல், சஞ்சலப்படாமல், சந்தேகம் கொள்ளாமல், அதுவே நாம், நாமே அது, என அகண்டபர பாவனையை, தைலதாரை போல் பழக வேண்டும்.




மனதுதான் நிஜசகஜ சொரூபமானவீ,
மனதுதான் மீளாது மாண்டு போகும்.
மனதுடைய மீளாத மாய்வுதானே,
மஹத்தான மோக்ஷநிலை அதுவே மைந்தா!
மனதனை மீளாது மாய்க்க வேண்டி,
மஹத்தான பரப்பிரம்ம நிச்சயத்தை,
ம ன ஒ ரு மை யு ட ன்! செய்துமனதை மா ய் த் து,
மஹத்தான முக்திநிலை மேவி நிற்பாயே.


கருத்து :- பாடல் 32ம் 33ம் ஒத்து உரையும்

கருத்துமட்டும்:- சர்வ சதா, ஆசைவசப்பட்டு அசைகின்ற மனமானது, ஓர்மைபடவில்லையாயின்! அம்மனம், பலஹீனமாக உள்ளதாயின் சிரத்தையோடு, மிகுந்த கவனமாக, பரிபூரண நம்பிக்கையாக, யாம் பிரம்மம்! யாம்பிரம்மம்! யாமே எ ல் லா ம்! என்ற பாவனையை,



107

நாமரூப உலகை காணும் போதும்; எந்த
பொருளையும் கொடுக்கும் போதும்! வாங்கும் போதும்!
எ ல் லா ம் ஒ ன் றே! என்றும்;
" ம ண் ணே! " ;
" அ து வே! " ;
" நா மே! " ;
நா மே அ து! என்னும் அகண்ட
பரபாவனையை திடமாக செய்தால் போதும்.
இந்த தர்மத்தினைச் அசையும் மனமானது
மெதுவாக மெதுவாக! மெதுவாக மெதுவாக!
அசைவற்று நிற்கும். இதுவே மனதின்
மாய்வாகும். இதுவே மனம் முடிந்தான நிலையாகும்.
இந்த மனோ வேகம்! தீ ரு ம் வ ரை!
கண்ணில் காணும் நாமரூபம் அனைத்தையும்
எல்லாம் மண்ணே அதுநாமே! எல்லாம் மண்ணே அதுநாமே!




என எந்த ச்ரவணமும்! சலிப்பும்! மயமும்!
இல்லாமல், செய்து வந்தால் இதைக்கொண்
ம ன வொ ரு மை யு ட ன்! செ ய்!
ம ன ம்! மா ண் டு போ கு ம்!
என வாக்கியப்ரமாணமாக சொல்கிறார்.
அவஸ்யம் நீயே! ஜீவன் முக்தன்! இது வாக்கியம்.

---

**41**

ஆதலினால் அனைத்திற்கும் அதீதமான,
அகண்டபரப்பிரம்மம் அகம் என்றெப்போதும்,
சாதகமாம் பாவனையே செய்துகாவே,
சஞ்சலமாம் விகற்பமெல்லாம் தவிர்த்து
பேதமில்லா பரப்பிரம்ம ஞானியாகி, எப்போதும்,
பின்னமில்லா பரப்பிரம்ம வடிவேயாவாய்.
ஈதையல்லால் எளிதாக முக்திசேர,
வேறொன்றும் உபாயமில்லை இதுவே உண்மை.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!